SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
1-15 பிப்ரவரி 2026 ₹25
Volume : 46 Issue : 16
www.samarasam.net

நம் வாழ்வில் மீண்டும் ஒரு ரமளான்


நீதிமன்றங்களே நீதியைக் கொலை செய்கின்றன
– பிரகாஷ் ராஜ்

இந்த உலகத்திற்கு சையது இப்ராஹீம்கள் மிகவும் தேவை
– பேராசிரியர் T. மார்க்ஸ்



# மீண்டும் மீண்டும் நேரு பேசப்பட வேண்டும்

அசுரப் பெரும்பான்மையோடு பத்தாண்டுகள் ஆட்சி செய்த பிறகும், அதன் பிறகு கூட்டணி ஆட்சி செய்து வருகிற நிலையிலும் இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையில் தாங்கள் நினைத்த அளவு சேதாரத்தை ஏற்படுத்த முடியாமல் போனதற்கு நேரு அமைத்து வைத்த அஸ்திவாரம்தான் காரணம் என்பதை உணர்ந்து பிரதமர் மோடி உள்ளிட்டவர்கள் இன்றைக்கும் நேருவைச் சபித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இப்போது நேருவை மீண்டும் மீண்டும் இந்திய அரங்கில் பேசப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.



TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

(மனிதர்களே!) நிச்சயமாக நாம் உங்களை
பூமியில் வசிக்கச் செய்தோம்;
அதில் உங்களுக்கு வாழ்க்கை வசதிகளையும்
ஆக்கித் தந்தோம். எனினும் நீங்கள்
நன்றி செலுத்துவதோ மிகவும் சொற்பமேயாகும்.

– திருக்குர்ஆன் 7:10

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்

35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611




## உள்ளே...


ட்ரம்பின் அடாவடிகள் முற்றுப்பெற வேண்டும் – தலையங்கம் **6**

மீண்டும் மீண்டும் பேசப்பட வேண்டும் நேரு – புதுமடம் ஜாஃபர் அலீ **8**

அநீதியான தீர்ப்புகள் – சேயன் இப்ராகிம் **12**

இயக்கப் பயணத்திலேயே இன்னுயிர் நீத்த இனிய தோழன் B. சையது இப்ராஹீம் – முனைவர் அப்துல் அஜீஸ் **16**

நம் வாழ்வில் மீண்டும் ஒரு ரமளான் – A.R. கமருன்னிசா ஜாபர் அலீ **20**

நீதிமன்றங்களே நீதியைக் கொலை செய்கின்றன! – பிரகாஷ் ராஜ் **22**

ஹபீபி தொடர் செயல்பாடாக மாற வேண்டும் இயக்குநர் மீரா கதிரவன் நேர்காணல் **30**

கவிதை: பால்யத்தை மீட்டெடுக்கும் குரல் – வி.எஸ்.முஹம்மத் அமீன் **35**

இந்த உலகத்திற்கு சையது இப்ராஹீம்கள் மிகவும் தேவை! – பேராசிரியர் T.மார்க்ஸ் **36**

இதர மத ஆளுமைகளின் பார்வையில் நபி(ஸல்) அவர்கள் – N. தௌஃபீகா ரஷ்மி **38**

நாவல்: அக்கரைப் பச்சை – ஜரினா ஜமால் **41**

ஓர் இலட்சியப் பெண்ணின் வாழ்வும் மரணமும் – அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது **44**

நூலாய்வு: உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரலி) – K. ஜலாலுத்தீன் **46**

கடைசிப் பக்கம்: கடையநல்லூரில் சமரசம் வாசகர் வட்டச் சந்திப்பு **50**

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி ● சிறார் உலகம்



ஆசிரியர் – வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net





## அறிய வேண்டிய விளக்கம்

இந்த இதழின் தலையங்கம் மிகச் சிறப்பு. வந்தே மாதரத்தை முஸ்லிம்கள் பாடாததற்கான காரணமும், விளக்கமும் ஒவ்வொருவரும் அறிய வேண்டியவை. பிள்ளைகளைத் தேடும் பெற்றோர்களை கவிதை மூலம் கவிஞர் காசிம் கண்முன் நிறுத்தி விட்டார். அக்கரைப் பச்சை நாவல் அன்றாட நிகழ்வுகளைச் சிறப்பாகப் பதிவு செய்கிறது. பேராசிரியர் அய்யம்பிள்ளையின் அண்டை வீட்டார் கட்டுரை அருமை. பாங்கொலிக்கும் ஒலிபெருக்கி உயிர் காத்த விதம் பாராட்டுக்குரியது.

– S.ராமுபிள்ளை, S.R. மல்லிகா, ஒகளூர்

## நிதிஷின் நோய்க்கு நல்ல மருந்து

முஸ்லிம்கள் ஏன் வந்தே மாதரத்தைப் பாடுவதில்லை என்பதற்கான மிகச் சிறப்பான விளக்கம் அளித்துள்ளார் சேயன் இப்ராகிம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற பேராசிரியர் அய்யம்பிள்ளையின் அண்டை வீட்டார் குறித்த கருத்துகள் உண்மையானது. சிறார் உலகத்தில் நூலகம் குறித்த கவிதை அருமை. நிதிஷ் குமாரின் மனநல பாதிப்புக்கும், மத வெறுப்புக்கும் சட்ட நடவடிக்கையே நல்ல மருந்து. இமாம் அப்துல் பாஸிதின் செயல் பாராட்டுக் குரியது.

– ப.குருசாமி, தேனி

## அநாகரிகமான செயல்

ஹிஜாப் கண்ணியமானது. அது தனி மனித சுதந்திரம். விருப்பத்துடனும், மகிழ்வுடனும் பெண்கள் மனமுவந்து அணிகிறார்கள். இதில் தலையிடுவது அநாகரிகம். அது பீகார் முதல்வரானாலும் சரியே!

– ப. பீர் இலாஹி, உத்தமபாளையம்

## ஆட்சி மாற்றமே அவலத்தைப் போக்கும்

நிதிஷ் குமாருக்கு மனநிலை பாதிப்பு, மத வெறுப்பு மட்டும் இல்லை ஆட்சி தந்த மமதை தலைக்கேறிவிட்டது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை ச.அய்யம் பிள்ளை அவர்களின் தொகுப்பு மனதுக்கு நிறைவாக இருந்தது. உயர் கல்வி ஆணையம் ஆகட்டும் வேறு எந்தத் துறையாக இருந்தாலும் ஆட்சி மாற்றம் மட்டுமே அவலத்தை மாற்றும். கண்கள் இறைவனின் அபார படைப்பு. சிறு தொகுப்பானாலும் யாவும் சிறந்த சொற்கள். தஹஜ்ஜுத் என்னும் பேரொளியை அனுபவிக்கக் கூடியவர்கள் தான் அதனுடைய பலன்களை உணர முடியும். கைப்பேசியின் எதார்த்தங்களை இதமாகச் சொல்லி இருக்கின்றது கவிதை.

– ஐ.சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## பயனுள்ள தகவல்கள்

இந்த நூற்றாண்டின் மார்க்க அறிஞர் டாக்டர் முஹம்மது ஹமீதுல்லாஹ் உண்மையாகவே வரலாறு படைத்துச் சென்றுள்ளார். அவருடைய வரலாற்றில் நமக்கு நிறைய படிப்பினைகள் உள்ளன. ஹதீஸ் விளக்கவுரையில் வெளியான ஒளி வீசும் முகங்கள் ஹதீஸ் பொருளீட்டுவதன் நோக்கத்தை நன்றாக உணர்த்தியது. கண்கள் குறித்த தகவல் புதிது. தஹஜ்ஜுத் தொழுகை கட்டுரை, கடைசிப் பக்கம் இமாம் அப்துல் பாஸித் விவேகத்தோடு செயல்பட்ட தகவல் அனைத்துமே பயனுள்ளதாக இருந்தது.

– S.நஜ்மா, மதுரை

## மறுக்க இயலா தரவுகள்

வந்தே மாதரம் குறித்து உள்ளதை உள்ளபடி எடுத்து விளக்கிய சேயன் இப்ராகிம் பாராட்டுக்குரியவர். மிகத் தெளிவாக மறுக்க முடியாத ஆதாரங்களை எல்லா மதத்தினரும் விளங்கிக் கொள்ளும்படி எழுதியுள்ளார்.

முழு வாழ்வின் நேரங்களும் கைப் பேசியில் தொலைவதை கவிதை அழகாகப் படம்பிடித்து காட்டியுள்ளது சிறப்பு.

- S.A. சபீர் அஹமது, ஆணைக்காரன் சத்திரம்

## விரிவான தகவல்

உயர் கல்வி ஆணையம் கார்பரேட் களின் தங்கச் சாவி கட்டுரை மிகவும் விரி வான தகவலை உள்ளடக்கியிருந்தது. கப்ளி சேட்டுக்குப் பாராட்டுகள்.

- S. அன்ஸாரி, உடுமலைப்பேட்டை

## ஒளி பெறுவோம்

நம் வாழ்வில் 80 விழுக்காடு தகவல் களைக் கண்கள் மூலம் பெறுகிறோம் என்பன போன்ற பல புதிய தகவல்களைச் சொன்ன கண்கள் கட்டுரை பயனுள்ளதாக இருந்தது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவரின் அண்டை வீட்டார் குறித்த உரை ஆழமானது. அற்புதமானது. டாக்டர் ஹமீ துல்லாஹ் குறித்த வாழ்க்கைப் பாடம் சிறப்பு. நிம்மதியாக சுவனம் செல்ல தஹஜ்ஜுத் காரண மாகிறது. ஒளிபாய்ச்சும் தொழுகையை நாமும் தொழுது ஒளி பெறுவோம்.

- S.அஜிதா, M.லைலாம்மா,
S.மகுதனன், தேனி

## மெய்சிலிர்க்க வைத்த கட்டுரை

உயர்கல்வி ஆணையம் மூலம் சிறு பான்மை மக்களின் உயர் கல்விச் சலுகை பறிபோய் விட்டது. இட ஒதுக்கீட்டிற்கும் ஆபத்து நேர்ந்ததை கப்ளிசேட்டின் கட்டுரை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது. டாக்டர் ஹமீதுல்லாஹ் என்ற கல்வியில் சிறந்த மகத்தான மனிதரை அறிமுகப்படுத்திய சமரசத்திற்கு நன்றி. அவரது சாதனைகள் மெய்சிலிர்க்க வைக்கிறது.

- ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம்

## முதல்வர் செய்கிற செயலா இது?

பீகார் முதல்வர் நிதிஷ்குமார் முஸ்லிம் பெண்ணிடம் நடந்து கொண்ட முறை அதிர்ச்சியையும், வேதனையையும் தந்தது. இது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல. வந்தே மாதரம், திருப்பரங்குன்ற தீப விவகாரம் பேசுபொருளாவது நாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல. இமாம் அப்துல் பாஸிதின் செயல் பாராட்டுக்குரியது. அறிஞர் ஹமீதுல்லாஹ் குறித்த செய்தி அற்புதம்.

- இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

## மனித நேயத்தின் சான்று

தொழுகைக்கு அழைத்திடும்
ஒலிபெருக்கி
மெழுகைப் போலவே
தான் உருகி
அழுகை துடைத்திட
கை நீட்டியது.
மனிதநேயத்தின் சான்றாக
இமாம் அப்துல் பாஸித்
ஆபத்தில் துயர்துடைக்க
ஆதரவு தந்து உயிர்காக்க
மதத்தின் பெயரால்
பிரிவினை பேசுவோருக்கு
சமயோசிதச் செயலால்
பாடம் நடத்தி உயர்ந்து நிற்கிறார்
கடைசிப் பக்கச் செய்தியில்
அறியத் தந்தீர் நன்றி

- சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

## ஆட்டம் அழிவுக்கே இட்டுச் செல்லும்

பதவி வெறியர்களும், மத வெறியர்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாக இருக் கும்போது அவர்களிடம் மனிதாபிமானத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? இந்த அராஜக ஆட்டம் அழிவுக்கே இட்டுச் செல்லும். வலை தள நட்புகள் நட்பின் புதிய பரிணாமம். கூடி வாழ்ந்தால் மனங்கள் மணமாகும், காயங்கள் மாயமாகும். துன்பங்கள் தூரமாகும். அஸ்மத் ஃபலீளா நூலகக் கவிதையும், கவிஞர் காசிமின் கைப்பேசி கவிதையும் அருமை.

- எம்.எஸ்.ஃபாரூக், திருப்பாலத்துறை

சரம் : 46
மலர் : 16

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 ஷாபான் 12-26 ● 2026 பிப்ரவரி 1-15

# ட்ரம்பின் அடாவடிகள் முற்றுப்பெற வேண்டும்

*இரண்டாவது முறையாக டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைகிறது. இந்த ஓராண்டிலேயே ட்ரம்பின் அடாவடிகளால் உலக நாடுகளும், உலகப் பொருளாதாரமும் திணறு கின்றன.*

*பதவி ஏற்றதும் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க மெக்ஸிகோ எல்லையில் தடுப்புச் சுவர், சட்டவிரோதக் குடியேறிகளின் உடனடி வெளியேற்றம், விசா கட்டணம் பன்மடங்கு உயர்வு என குடியேற்றக் கொள்கைகளைக் கடுமையாக்கினார். சட்டவிரோதக் குடியேறிகளின் கை, கால்களில் விலங்கிட்டு, ராணுவ விமானத்தில் நாடு கடத்தி மனித உரிமையைக் காலில் போட்டு மிதித்தார்.*

*சட்டவிரோதக் குடியேறிகள் அமெரிக்காவுக்குள் ஊடுருவ உதவுவதாக அண்டை நாடுகளான மெக்ஸிகோ, கனடாவிற்குக் கூடுதல் வரி விதித்தார். நேட்டோ ராணுவக் கூட்டமைப்பில் டென்மார்க் இடம் பெற்றுள்ளதால் அந்த நாட்டுக்கு ஆதரவாக நார்வே, ஸ்வீடன், பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன், பின்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகள் கிரீன்லாந்துக்குப் படைகளை அனுப்பின. இதனால் ஆத்திரமடைந்த ட்ரம்ப் டென் மார்க் உள்ளிட்ட எட்டு ஐரோப்பிய நாடுகளுக்கு அதிரடியாக 10 விழுக்காடு கூடுதல் இறக்குமதி வரியை விதித்தார். கனடா மீது 35 விழுக்காட்டுக்கு அதிகமாக மேலும் 10 விழுக்காடு வரியை விதிக்கப் போவதாகக் கூறியுள்ளார்.*

*சீனாவுக்கு 145 விழுக்காடு வரி விதித்ததுடன், இந்தியாவிற்கு 25 விழுக்காடு வரியை மேலும் 25 விழுக்காடு உயர்த்தி 50 விழுக்காடு வரி விதித்ததுடன் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கினால் இந்தியா விற்கு 500 விழுக்காடு வரி விதிக்கும் வகையில் 'ரஷ்ய தடைகள் மசோதா' என்ற அமெரிக்காவின் புதிய மசோதாவை நிறைவேற்ற உள்ள தாக அறிவித்து பீதியைக் கிளப்பியுள்ளார். தங்கம் வரலாறு காணாத அளவு உயர ட்ரம்பின் நடவடிக்கைகள் முக்கியக் காரணமாக அமைந்துள்ளது. ஆப்பிரிக்க ஏழை மக்களுக்கான உணவு, மருத்துவத்திற்கான நிதியையும் நிறுத்தி விட்டார்.*

*தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக டென்மார்க்கின் தன்னாட்சிப் பகுதியான கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைப்பது தொடர்பாக டென்மார்க்குடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும், உடன்பாடு*

எட்டப்படாவிட்டால் ராணுவ நடவடிக்கை எடுக்கப்போவதாக மிரட்டினார். எதிர்ப்புக் கிளம்பியதும் ராணுவ நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என பல்டி அடித்துள்ளார். கனடாவையும் தங்களது மாநிலங்களில் ஒன்று என்று கூறிவந்த நிலையில் அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக கிரீன்லாந்து இருக்கும் என்கிறார். கிரீன்லாந்தின் எண்ணெய் வளம், எரிவாயு, நிக்கல், கோபால்டு உள்ளிட்ட அரிய கனிம வளங்களைக் கொள்ளையடிப்பதே அமெரிக்காவின் நோக்கம்.

இதே போல் எண்ணெய் வளங்களைக் குறிவைத்து வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவையும் அவருடைய மனைவியையும் கடத்திக் கைது செய்துள்ளது ட்ரம்ப் நிர்வாகம். அத்துடன் வெனிசுலாவின் நிர்வாகத் தலைவர் நான்தான் என்றும் ட்ரம்ப் கொக்கரிக்கிறார்.

ஏகாதிபத்தியத்தின் அடிப்படைக் குணமே சுரண்டலும், ஆக்கிரமிப்பும்தான். வரி யுத்தம் ஒருபுறம் என்றால் இஸ்ரேலுடன் கூட்டுச் சேர்ந்து ஃபலஸ் தீனைத் தகர்த்ததும், ஈரான் மீது தாக்குதல் நடத்தியதும், தன்னைத் தாக்கினால் ஈரான் என்ற ஒரு நாடே வரைபடத்தில் இருக்காது என்று மிரட்டுவதுமான அராஜகத்தில் ஈடுபட்டுக் கொண்டே 8 போர்களை நிறுத்தியதற்காக தனக்கு நோபல் பரிசு வழங்கவேண்டும் என்று அடம் பிடித்தார். நோபல் பரிசு கிடைக் காததால் நோபல் பரிசு பெற்ற வெனிசுலாவின் மரியா கொரினா மச்சாடோ விடமிருந்து அதைப் பெற்றுக் கொண்டார்.

அமைதிக்கான பரிசு தரவில்லை எனவே இனி அமைதியைப் பற்றிப் பேசி பயனில்லை என்று சொன்னதுடன் ஐ.நா சபைக்கு மாற்றாக ‘அமைதி வாரியம்’ (Board of peace) என்ற புதிய சர்வதேச அமைப்பைத் தொடங்கி உள்ளார். இந்தப் புதிய அமைப்பில் ரூ.9,000 கோடி கட்டணம் செலுத்தி உறுப்பினராகச் சேரலாம் என்று அழைப்பு விடுத்துள்ளார். பல்வேறு சர்வ தேச அமைப்புகளில் இருந்து அமெரிக்கா வெளியேறிய நிலையில் இந்த முயற்சி உலக அமைதியின் சீர்குலைவுக்கான முன்முயற்சியாகவே பார்க்கப் படுகிறது.

ஓராண்டிலேயே இத்தனை அத்துமீறல்கள் என்றால் இனிவரும் மூன்று ஆண்டுகளில் என்னென்ன செய்யப்போகிறாரோ என்ற பதை பதைப்புடன் நாள்களைக் கடந்துவிடாமல் ட்ரம்பின் அராஜகப் போக்கைத் தடுத்து நிறுத்த உலக நாடுகள் முன்வர வேண்டும். டாலருக்கு மாற்றான திட்டத்தைக் கையிலெடுத்தாலோ, தங்களுக்கு எதிரான நடவடிக்கையை யோசித்தாலோ அவர்கள் மீது பாய்ந்து தாக்குவதையும், அந்த நாட்டின் ஜனநாயகத்தைச் சிதறடிப்பதையும் கண்டு அடங்கிவிடாமல் துணிவு கொண்டு எதிர்க்க வேண்டும். குறிப்பாக இந்தியா தனது அழுத்தமான குரலை வெளிப்படுத்த வேண்டும்.

பெரியண்ணன் மனப்பான்மையில் வல்லாதிக்கம் செலுத்திவரும் அமெரிக்காவின் நவீன ஏகாதிபத்தியத்தைச் செயல்படுத்த முயலும் ட்ரம்பின் அடாவடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சர்வதேச ஒழுங்கைச் சீர்குலைப்பதன் மூலம் மூன்றாம் உலகப் போருக்கு வித்திடும் அபாயத்திலிருந்து காக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது.

இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு விடுதலை இந்தியாவின் முதல் பிரதமராகப் பதவி ஏற்ற பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமை என்ற பன்முகத் தன்மையையும் மதங்களுக்கு இடையேயான சகோதரத்துவத்தையும் உறுதியுடன் தொடரப் பல நடவடிக்கை களை மேற்கொண்டார்.

ஒன்றிய அரசின் உயர் பதவிகளிலும் தனது அமைச்சரவையிலும் இஸ்லாமியர்களுக்கு முக்கியமான பதவிகளை அளித்து மதச்சார்பற்ற ஜனநாயக ஆட்சிக்கு வித்திட்டார். கல்வியாளர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் மத்திய கல்வி அமைச்சராகவும், ரபி அகமது கித்வாய் தகவல் ஒளிபரப்பு அமைச்சராகவும் நேருவின் முதல் அமைச்சரவையில் இடம் பெற்றனர். இதன் மூலம் அரசின் மதச்சார்பற்ற தன்மைக்கு அடித்தளம் அமைத்தார் பிரதமர் நேரு.

தனது அமைச்சரவையில் மட்டுமல்ல, ஆட்சியில் சிறுபான்மை சமூகத் தினருக்கு அதிகாரத்தின் அனைத்து நிலைகளிலும் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதைக் கண்காணித்து உறுதி செய்தார் நேரு.


பிரிவினைக்குப் பிறகு இஸ்லாமியர்கள் குறித்து அவதூறுகளும், இஸ்லாமி யர்களைக் குறி வைத்து அத்துமீறல்களும் அதிகரித்து வந்த நிலையில், அதிகார நிலைகளில் இஸ்லாமியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதன் மூலம் மாபெரும் ஒடுக்கு முறையிலிருந்து இஸ்லாமிய சமுதாயத்தை மீட்டெடுத்தார் நேரு.

# மீண்டும் மீண்டும் பேசப்பட வேண்டும் நேரு

**- புதுமடம் ஜாஃபர் அலீ**



ஆனால் இன்றைய பாஜக பிரதமர் மோடியோ சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் மட்டுமல்ல எவ்வித அதிகார நிலைகளிலும் சிறுபான்மையினர் எந்த வகையிலும் இடம்பெற்று விடக்கூடாது என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.


அபுல் கலாம் ஆசாத்

இன்னும் 21 ஆண்டுகளில் இந்தியா தனது விடுதலை தினத்தின் நூற்றாண்டு விழாவைக் காண இருக்கிறது. நாடாளுமன்றமாக இருக்கட்டும், நாடாளுமன்றத்திற்கு வெளியில் ஆகட்டும் இந்தியாவை ஆட்சி செய்யும் பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு மீதுதான் குற்றம் சாட்டி வருகிறார்கள்.


ரபி அகமது கித்வாய்

அசுரப் பெரும்பான்மையோடு பத்து ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகும், அதன் பிறகு கூட்டணி ஆட்சி செய்து வருகிற நிலையிலும் இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையில் தாங்கள் நினைத்த அளவு சேதாரத்தை ஏற்படுத்த முடியாமல் போனதற்கு நேரு அமைத்து வைத்த அஸ்திவாரம் தான் காரணம் என்பதை உணர்ந்துதான் பிரதமர் மோடி உள்ளிட்டவர்கள் இன்றைக்கும் நேருவை சபித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தியா விடுதலை அடைந்த 1947 காலகட்டத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியா - பாகிஸ்தான் என இரண்டாகப் பிரித்த நிலையில் ஜவஹர்லால் நேருவைத் தவிர வேறு யாராவது பிரதமராக இருந்திருந்தால், இன்றைக்கு இந்தியா இந்த வடிவத்தில் இருந்திருக்குமா என்பது ஐயமே!

விடுதலை இந்தியா என்ற பிறந்த குழந்தையின் கழுத்தில் மந்திரித்த கயிறு கட்டுவதா, நெற்றியில் பொட்டு வைப்பதா என்று பலர் காரசாரமாக விவாதித்த நிலையில் அந்தக் குழந்தைக்கு தடுப்பூசிகளைச் செலுத்தி, ஊட்டச்சத்து கொடுத்து வளர்த்தெடுத்த தந்தைதான் பண்டித நேரு. அவர்களோடு சேர்ந்து கொண்டு என்ன வண்ணத்தில் கயிறு கட்டுவது, நெற்றியில் என்ன பொட்டு வைப்பது என நேரு யோசித்து இருந்தால் இந்தியா என்ற குழந்தை சவலைப் பிள்ளையாகவே இருந்து சாவைத் தழுவி இருக்கும்.

ஆனால் இன்றைக்கு ஜனநாயகத்திலும் பொருளாதாரத்திலும் இந்தியா ஊட்டச்சத்து மிக்க நாடாக எழுந்து நிற்கிறது என்றால் அதற்கு நேரு என்ற தாய்தான் காரணம். ஜவஹர்லால் நேருவின் தொலைநோக்குப் பார்வையும் அரசியல் ஞானமும் ஜனநாயகம், சோசலிசம், மதச்சார்பின்மை, அணிசேரா கொள்கை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருந்தன.

இந்தக் கோட்பாடுகள் நேருவின் ஆழமான வரலாற்று வாசிப்பின் காரணமாகவும், அதைவிட ஆழமாக மக்கள் மீதான நேசிப்பின் காரணமாகவும் தான் அவரால் நிறுவப்பட்டன. தன்னை நேசித்த கோடிக்கணக்கான இந்திய மக்களின் தேவையை நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் உணர்ந்ததால்தான் நேருவால் இந்தியாவுக்கு இப்படிப்பட்ட அஸ்திவாரத்தைப் போட முடிந்தது.

தனது வாழ்நாள் முழுவதும் நேரு அனைத்து மதங்களுக்கிடையேயான ஒற்றுமையைத்தான் நம்பினார். அவர் பிளவுபடுத்தும் அரசியலைக் கண்டித்தார். எந்த ஒரு மதத்தின் மீதான நம்பிக்கையும் எப்போதும் ஒரு தனிப்பட்ட விஷயம்; அதில் அரசு தலையிடக்கூடாது. அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் குடிமக்களுக்கு மதச் சுதந்திரத்திற்கான உரிமையைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. மத விவகாரங்களில்

குடிமக்களை அரசு கட்டாயப்படுத்த முடியாது என்பதில் உறுதியாக இருந்தார்.

தொடக்கத்தில் முழு அரசியலமைப்பிலும் மதச்சார்பின்மை என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை என்றாலும், 1976ஆம் ஆண்டின் 42ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் 'மதச்சார்பற்ற' என்ற சொல் சேர்க்கப்பட்டது. அரசியல் அமைப்பில் மதச்சார்பின்மை என்ற சொல் சேர்க்கப்படாத தன்னுடைய காலத்தில்கூட மத உணர்வு மிகுந்தவர்கள் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருந்த நிலையிலும் மதச்சார்பற்ற அரசாக இந்திய அரசை வழி நடத்தியதில் நேருவின் தனிப்பட்ட ஞானத்துக்கு முக்கியப் பங்கு உண்டு.

இதற்கு முக்கியமான ஒரு வரலாற்றுச் சான்று இருக்கிறது. இந்திய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோதே 1931இல் நேரு இன்றைய பாகிஸ்தானில் இருக்கும் கராச்சியில் அடிப்படை உரிமைகள் குறித்த காங்கிரஸ் தீர்மானத்தை (1931) வரைவு செய்தார்.

இந்த வரைவில், அனைத்து மதங்களிலும் அரசு நடுநிலையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார் நேரு. 1931ஆம் ஆண்டிலேயே விடுதலை இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்று நினைத்த நேரு, 1947க்குப் பிறகு தான் பிரதமராக இருந்தபோது உள்ளுக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் பல தடைகள் இருந்த போதும் அதை நடைமுறைப்படுத்தினார்.

இந்திய பாரம்பரியத்தின் மறுமலர்ச்சி, இந்திய சமூகத்தின் ஆங்கில காலனி ஆதிக்க அனுபவங்கள், உலக அளவில் சுதந்திரம் பெற்ற நாடுகளின் சமூக எதார்த்தங்கள், மக்களுக்கு அறிவியலின் தேவை இவற்றையெல்லாம் அறிந்த ஒரு தலைவராக நேரு இருந்ததால்தான் அவரது காலத்தில் இந்தியா சிறந்த மதச்சார்பற்ற நாடாக விளங்கியது.

நேரு உலகத்தைப் படித்தார். அதனால் நவீன இந்திய அரசியலில் மாற்றுச் சிந்தனைகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்தினார். ஜனநாயகம், சோசலிசம், மதச் சார்பின்மை, தேசியவாதம், வெளியுறவுக் கொள்கை, கலப்புப் பொருளாதாரம், அணி சேரா இயக்கம் பலவாகும்.

மதங்கள் குறித்த நேருவின் சிந்தனை மற்ற இந்தியச் சிந்தனையாளர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. பன்முகத் தன்மை கொண்ட, பல மதங்களைக் கொண்ட இந்திய சமூகத்தில் மதத்தை அரசின் ஒரு பகுதியாகக் கருதுவது ஆபத்தானது என்று அவர் நம்பினார். எனவேதான் சமூகத்தின் நலனுக்காக நேரு மதச்சார்பற்ற சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டார்.

ஜவஹர்லால் நேரு ஒரு காஷ்மீரி பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் அவர் ஒரு பழமைவாத நபர் அல்ல. அவர் புத்தர், சங்கராச்சாரியார், கபீர், பேரரசர்கள் அசோகர், அக்பர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டார். அவர் எப்போதும் விஷயங்களை அறிவியல், தொழில்நுட்ப ரீதியாகவே விவரித்தார். அவரது பார்வையில், அவர் இந்திய ஜனநாயகத்தை வழிநடத்தினார்.

ஜவஹர்லால் நேரு ஓர் இறைமறுப்பாளர். அவர் ஆன்மிகத்தை நம்பவில்லை. தனது அரசியல் வாழ்வில் காந்தியால் ஈர்க்கப்பட்டாலும், காந்திய மதக் கோட்பாட்டை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. தனது 'இந்தியாவைக் கண்டறிதல்' என்ற புத்தகத்தில் நேரு 'தர்மம்' என்ற சொல்லுக்கு அழகான ஒரு விளக்கத்தைத் அளித்துள்ளார்.

'தர்மம் என்பது மதத்தை விட மேலான ஒன்றைக் குறிக்கிறது. அது ஒன்றிணைப்பது என்ற வேர்ச்சொல்லிலிருந்து வந்தது. இது ஒரு நெறிமுறை சார்ந்த கருத்து, இதில் ஒழுக்க நெறி, நீதி, மனிதனின் கடமைகள், பொறுப்புகள் அனைத்தும் அடங்கும்' என்று தர்மத்தை வரையறுத்தார் நேரு.

நேருவின் மதச்சார்பின்மை வரையறை என்பது முக்கியமான பின்வரும்

அம்சங்களைக் கொண்டது. அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாச்சார வாழ்வின் அம்சங்களிலிருந்து மதத்தைப் பிரித்தல். மதம் முற்றிலும் தனிப்பட்ட விஷயமாகக் கருதப்படுதல்.

மத விஷயங்களில் அரசின் நடுநிலைமை அனைத்து மதங்களுக்கும் முழுச் சுதந்திரம், அனைத்து மதங்களையும் சகித்துக் கொள்ளுதல், அனைத்து மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும் சம வாய்ப்புகள், மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாமை. இதுதான் நேருவின் மதச்சார்பின்மை.

நேரு மதமற்றவராகவோ அல்லது மத விரோதியாகவோ இருக்கவில்லை, ஆனால் மதம் குறித்த அவரது அணுகுமுறையும் மனிதநேய தாராளவாத பாரம்பரியம், தனித்துவம், பகுத்தறிவு, உலகளாவியவாதம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தது.

மதம் குறித்த நேருவின் பார்வை மிகவும் தெளிவாக இருந்தது. மதச்சார்பின்மையை ஜனநாயகத்துடன் இணைத்தார். மதம் அல்லது இறைவன் என்ற தத்துவம் அரசாங்கத்தோடு இணைவதற்கு நவீன காலத்தில் எந்தப் பொருத்தமும் தேவை இல்லை என்பதுதான் நேருவின் அசைக்க முடியாத நிலைப்பாடு.

இவ்வளவு வலிமை வாய்ந்த சிந்தனையும் செயல் திறனையும் கொண்ட நேருவால்தான், விடுதலை இந்தியா நவீன சிந்தனை நீரோட்டத்திலிருந்து துண்டிக்கப்படாமல் தப்பித்தது. நேருவின் காலத்தில் மதத்தின் அடர்த்தி இப்போது இருப்பதை விட அதிகமாக இறுக்கமாக இருந்த நிலையிலும், இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாக உருவெடுத்தது நேரு என்ற ஆளுமையின் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

‘பிரிவினைக்குப் பிறகு, இந்தியாவில் இன்று இருப்பதை விட மத துவேஷங்கள் பல மடங்கு உச்சத்தில் இருந்தது. ஆனால் அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேருவின் ஆழமான விரிவான அரசியல்

**இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையில் தாங்கள் நினைத்த அளவு சேதாரத்தை ஏற்படுத்த முடியாமல் போனதற்கு நேரு அமைத்து வைத்த அஸ்திவாரம்தான் காரணம் என்பதை உணர்ந்துதான் பிரதமர் மோடி உள்ளிட்டவர்கள் இன்றைக்கும் நேருவை சபித்துக் கொண்டிருக்கின்றார்கள்.**

அணுகுமுறைகளால் கசப்பு குறைக்கப்பட்டது. பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, அனைத்து முஸ்லிம்களும் பாகிஸ்தான் செல்ல வேண்டும் என இந்து தேசியவாதிகள் வலியுறுத்திய போது, ‘இந்தியாவில் இருக்க விரும்பும் இஸ்லாமியர்கள் இந்தியாவிலேயே இருக்க வேண்டும். அவர்களும் நமது கலாச்சாரத்தின் வேர்கள்’ என்று கூறினார் நேரு.

ஆனால், இன்று இதுபோன்ற மதத் துவேஷங்கள் வெறுப்புப் பரப்புரைகள் நாடு முழுவதும் தொடங்குகிறது. இது தொடர்ந்தால், நாடு எங்கு நிற்கும் என்ற அச்சம் மதச்சார்பின்மையை நேசிக்கும் உள்ளங்களுக்கு ஏற்பட்டுள்ளது. பண்டித நேரு இந்திய மக்களின் மனங்களில் விதைத்த மதச்சார்பின்மை இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறதோ என்ற அச்சம் நிலவுகிறது.

எனவே இப்போது நேருவை மீண்டும் மீண்டும் இந்திய அரங்கில் பேசப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நேருவின் ஆட்சி முறை நேருவின் மதம் பற்றிய அணுகுமுறை ஆகியவற்றைப் பற்றி விரிவான உரையாடல்களை இந்தியாவில் மீண்டும் நாம் முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் இந்தியா தொடர்ந்து மதச்சார்பற்ற இந்தியாவாக நீடிக்கும்.




# அநீதியான தீர்ப்புகள்

• சேயன் இப்ராகிம்

## உமர் காலித் – சர்ஜீல் இமாம் பிணை மறுப்பு

**2020**ஆம் ஆண்டு டெல்லியில் குடியுரிமை திருத்தச் சட்டத்தை(CAA) எதிர்த்து மாணவர்கள் நடத்திய போராட்டத்திற்கு உமர் காலிதும் சர்ஜீல் இமாமும் தலைமை ஏற்றிருந்தனர். இந்தப் போராட்டம் மிக அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்த போதே, வடகிழக்கு டில்லியில் போராட்டம் நடத்திய முஸ்லிம்கள் மீது இந்துத்துவ வாதிகள் தாக்குதல் நடத்தினர். இது ஒரு பெரும் வகுப்புக் கலவரமாக மாறியது. இந்தக் கலவரத்திலும், அதனை அடக்க டெல்லி காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும் 53 பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் 36 பேர் முஸ்லிம்கள். முஸ்லிம்களின் வணிக நிறுவனங்கள் தாக்கப்பட்டு சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டன. பல முஸ்லிம்களின் வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. 23.2.20 அன்று தொடங்கிய இந்தக் கலவரம் 29.2.20 வரை நீடித்தது. ஆனால், காவல் துறையினர் பெரிதும் பாதிப்பிற்குள்ளான முஸ்லிம்களையே கைது செய்து வழக்குப் போட்டனர்.

இந்த நிலையில் இந்தக் கலவரத்தை ஏற்படுத்தச் சதி செய்ததாகவும், மூளையாக இருந்து செயல்பட்டதாகவும் மாணவர் தலைவர்களான உமர் காலிதும், சர்ஜீல் இமாமும் இன்னும் ஐந்து முஸ்லிம் இளைஞர்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். தங்களை பிணையில் விடுதலை செய்யக் கோரி இவர்கள் தாக்கல் செய்த பிணை மனுக்களை விசாரணை நீதிமன்றமும், டெல்லி உயர் நீதிமன்றமும் தள்ளுபடி செய்தன.

விசாரணைக் கைதிகளாக சிறையிலேயே வைக்கப்பட்டிருந்த இந்த எழுவரும், ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவித்த நிலையில், பிணை வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தை நாடினர். சுமார் மூன்று மாதங்களுக்கும் மேலாக இந்த பிணை மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், உமர் காலிதும், சர்ஜீல் இமாமும் தாக்கல் செய்த பிணை மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தனர்.

எனினும், மற்ற ஐந்து பேருக்கும் கடும் நிபந்தனைகளின் அடிப்படையில் பிணை வழங்கி உத்தரவிட்டனர். இது ஒரு ஆறுதலான செய்தியாகும். ‘ஒரு வேளை

குற்றம் நிரூபிக்கப்பட்டு உங்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டால் நீங்கள் விசாரணைக் கைதியாக சிறையில் இருந்த காலம் கழிக்கப்பட மாட்டாது' என்ற ஒரு வினோதமான நிபந்தனையையும் நீதிபதிகள் விதித்துள்ளனர். இது நீதித்துறை வரலாற்றில் இதுவரை யாரும் வழங்காத நிபந்தனையாகும்.

இந்த வழக்கில் ஐந்தரை ஆண்டுகள் கடந்த பின்னரும், விசாரணை இதுவரை தொடங்கப்படவில்லை. 700க்கும் மேற்பட்ட சாட்சிகள் இந்த வழக்கில் விசாரிக்கப்பட உள்ளனர். இவர்களையெல்லாம் விசாரித்துத் தீர்ப்பு வழங்க விசாரணை நீதிமன்றத்திற்கு ஆண்டுகள் பல பிடிக்கும். விசாரணையில் ஏற்பட்டுள்ள தாமதத்தைச் சுட்டிக் காட்டியே இவர்கள் தங்களுக்கு பிணை வழங்க வேண்டுமென நீதிமன்றத்தில் முறையிட்டனர். எனினும், தாமதத்தைக் காரணம் காட்டி பிணை கோர முடியாது என நீதிபதிகள் கூறி இவர்களின் பிணை மனுக்களை நிராகரித்துள்ளனர்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் பிரிவு 43இன் படி, மேலெழுந்த வாரியாக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இருப்பதாக நீதிபதிகள் திருப்தியடைந்தால், பிணை மனுக்களை நிராகரிக்க முடியும். இந்த விதியினைச் சுட்டிக் காட்டியே நீதிபதிகள் பிணை வழங்க மறுத்துள்ளனர். இந்த இருவரும்தான் கலவரம் ஏற்படுத்தச் சதி செய்துள்ளனர் என்று குற்றச்சாட்டு இருப்பதாகத் தெரிவித்த நீதிபதிகள், மற்றவர்கள் சதிச் செயலில் ஈடுபடவில்லை. எனவே அவர்களுக்குப் பிணை வழங்குகிறோம் என்று தீர்ப்பளித்துள்ளனர்.

பிணை என்பது உரிமை. சிறை என்பது விதிவிலக்கு என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஏற்கனவே பல வழக்குகளில் தீர்ப்பு வழங்கியுள்ளனர். ஆனால், இந்த விதி இந்த இருவருக்கும் பொருந்தாது போலும்!

ஐந்தரை ஆண்டுகள் கடந்த பின்னரும், இந்த வழக்கில் இதுவரை விசாரணை தொடங்கப்படவில்லை. விசாரணைக் கைதியாகவே இவர்கள் ஐந்தரை ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் வாடுகின்றனர். அவர்களது இளமைக் காலத்தின் கால் பகுதி சிறையிலேயே கழிந்து விட்டது. இன்னும் எத்தனை ஆண்டுகள் இவர்கள் சிறையில் இருப்பர்? விசாரணை முடிய பல ஆண்டுகள் ஆகி, இறுதியில் அவர்கள் நிரபராதிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டால், அவர்கள் அடைந்த இன்னல்களுக்குப் பரிகாரம் என்ன? இந்த விஷயங்களையெல்லாம் உச்ச நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. எனினும், பல சட்ட நிபுணர்களும், மனித உரிமையாளர்களும் இவர்களுக்கு பிணை வழங்கப்படாததைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர். 15.1.26 இந்து ஆங்கில நாளிதழில் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கௌதம் பாட்டியா இது குறித்து எழுதியுள்ள கட்டுரையில் இந்தத் தீர்ப்பு அநீதியானது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த இருவருக்கும் பிணை வழங்க மறுத்த நீதிபதிகள் இன்னும் ஓராண்டு கழிந்த பின்னரே இவர்கள் மீண்டும் பிணையில் மனுக்களைத் தாக்கல் செய்ய முடியுமென்றும் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர். எனவே இவர்கள் இருவரும் பிணையில் வெளிவர இன்னும் ஓராண்டு காத்திருக்க வேண்டும். அப்போதாவது நீதிபதிகள் பிணை வழங்குவார்களா? இவர்களுக்கு நீதி கிடைக்குமா?


இந்தத் தருணத்தில் 2020ஆம் ஆண்டு, வடகிழக்கு டெல்லியில் நடைபெற்ற கலவரத்தின் போது முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைக் கருத்துகளைத் தெரிவித்த ஒன்றிய இணை அமைச்சர் அனுராக் தாக்கூர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் எனத் தீர்ப்பளித்த டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி முரளிதர், இரவோடு இரவாக சண்டிகார் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டதும், அதன் பின்னர் அமைச்சர் மீது முதல் தகவல் அறிக்கை எதுவும் பதியப்படாமல் அந்த வழக்கு கிடப்பில் போடப்பட்டதும் நமது நினைவுக்கு வருகின்றது. அந்த

நீதிபதியும் பழி வாங்கப்பட்டார். சென்னை உயர் நீதிமன்றத்திற்குத் தன்னை மாறுதல் செய்ய வேண்டும் என்ற அவரது கோரிக் கையும் நிராகரிக்கப்பட்டது.

## திருப்பரங்குன்றம் தீபம் ஏற்றும் வழக்கு

மதுரை திருப்பரங்குன்றம் மலையிலுள்ள சிக்கந்தர் தர்காவுக்கு அருகிலுள்ள ஒரு தூணில் கார்த்திகை நாளன்று தீபம் ஏற்ற வேண்டுமென சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் நீதிபதி ஜி.ஆர். சுவாமி நாதன் தீர்ப்பளித்திருந்தார். இந்தத் தீர்ப் பினை எதிர்த்து தமிழ்நாடு அரசும், அறநிலை யத்துறையும், தர்கா நிர்வாகமும், இன்னும் சில பொது நல அமைப்புகளும் தொடர்ந்த மேல் முறையீட்டு மனுக்களை அதே நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு தள்ளுபடி செய்துள்ளது. தனி நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனின் தீர்ப்பை உறுதி செய்துள்ளது.

இந்தத் தீர்ப்பு ஏற்கத்தக்கதல்ல. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல் முறையீடு செய்யும் என தமிழ்நாடு சட்ட அமைச்சர் ரகுபதி கூறியிருக்கிறார். இந்தத் தீர்ப்பு அநீதியானது எனப் பல சட்ட நிபுணர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். மேல்முறையீடு செய்தவர்கள் எழுப்பிய பல்வேறு வாதங்களை நீதிபதிகள் புறக் கணித்துள்ளனர். இதற்கு முன்னர், இந்தப் பிரச்னை குறித்து பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகளையும் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் அவர்கள் கவனத்தில் கொள்ள வில்லை.



தர்காவுக்கு அருகிலுள்ள தூண் கோயி லுக்குச் சொந்தமானது. எனவே அங்கு தீபம் ஏற்றுவதற்குத் தடை இல்லை. ஏற்ற வேண்டும் என்ற தனி நீதிபதியின் தீர்ப்பினை இந்த இரு நீதிபதிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எந்தக் காலத்திலும் அந்தத் தூணில் தீபம் ஏற்றப்படவில்லை. இப்போது ஏன் ஏற்ற வேண்டும் என்ற கேள்விக்கும் நீதிபதிகளிடம் பதில் இல்லை. ஏற்கனவே கோயில் நிர்வாகத் தால் மலையின் உச்சியிலுள்ள பிள்ளையார் கோயிலில் தீபம் ஏற்றப்படுகின்ற போது, இன்னொரு இடத்தில் இரண்டாவதாக ஏன் தீபம் ஏற்ற வேண்டும் என்பதற்கும் நீதிபதிகள் பதில் அளிக்கவில்லை.

இதுவரை இல்லாத ஒரு புதுப் பழக்கத்தை ஏன் ஏற்படுத்த வேண்டும் என்பதற்கும் அவர்களிடம் பதில் இல்லை. தர்காவுக்கு அருகில் அந்தத் தூண் இருக்கின்றது என்ப தற்காகவே இந்துத்துவா அமைப்பினர் அங்கு தீபம் ஏற்ற முனைகின்றனர். இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தர்காவுக்கு அருகில் பிரச்னையை ஏற்படுத்த நினைக் கின்றனர். இதனையும்கூட நீதிபதிகள் கவனத் தில் எடுத்துக் கொள்ளவில்லை.

நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பில், அந்தத் தீபத்தூண் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் இருக்கிறது. எனவே தர்கா நிர்வாகம் அதனை ஆக்கிரமிப்புச் செய் யாவண்ணம் பாதுகாப்பதற்காக அங்கு தீபம் ஏற்ற வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். (Justice Swaminathan said, 'It is, therefore, necensary that the temple management remains vigilant to foil any attempt to encroach on its property. This can be done only by regular and periodic assertion of title. It is not a matter of religious tradition alone. At least for the sake of protecting its property, the temple management is obliged to light the festival lamp at the derpath oon.' He directed the temple management to light the Karthigai Deepam at the deepathoon, be sides the usual places, on December 3.)

அந்தத் தூணில் முன்பு தீபம் ஏற்றப் பட்டது. எனவே மீண்டும் தீபம் ஏற்ற அனு மதிக்க வேண்டுமென இந்துத்துவாவைச் சேர்ந்தவர் வழக்குத் தொடுக்கிறார். ஆனால், அந்தத் தூணில் இதற்கு முன்னர் எப்போதும் தீபம் ஏற்றப்பட்டதற்கான சான்றுகளை மனு தாரரால் சமர்ப்பிக்க முடியவில்லை. எனவே நீதிபதி, கோயில் இடத்தைப் பாதுகாப்பதற் காக அந்தத் தூணில் தீபம் ஏற்ற உத்தரவிடு கின்றார்.

எதற்காக அந்தத் தூண் இருக்கும் இடத்தை தர்கா நிர்வாகம் ஆக்கிரமிக்க வேண் டும்? இதற்கு முன்பு தர்கா நிர்வாகம் அதனை ஆக்கிரமிக்கின்ற முயற்சிகளில் எப்போதாவது ஈடுபட்டிருந்ததா? ஒன்றுமே இல்லை! அனு மான அடிப்படையிலேயே தனி நீதிபதி தீர்ப்பு வழங்குகிறார். அதனை இரு நீதிபதிகள் அமர்வும் ஏற்றுக் கொள்கிறது. எனவே இந்தத் தீர்ப்புகள் இந்து சமயச் சட்டங்களை காப்பாற்று வதற்காக வழங்கப்பட்ட தீர்ப்பு அல்ல. மாறாக சொத்துரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற ரீதியில் வழங்கப்பட்ட தீர்ப்பாகவே கருத வேண்டியதிருக்கிறது.

தனி நீதிபதியின் தீர்ப்பை நடைமுறைப் படுத்தியிருக்க வேண்டும், அப்படிச் செய்யாது சட்ட ஒழுங்குப் பிரச்னையைக் காரணம் காட்டி தமிழக அரசு அரசியல் செய்வதாகவும் நீதிபதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சட்ட ஒழுங்கும், நல்லிணக்கமும் கெடும் என்று கருதியே தமிழக அரசு இந்த விஷயத்தில் செயல்பட்டுள்ளது. இதற்கு ஏராளமான முன்னுதாரணங்கள் உள்ளன.

இது தொடர்பான இன்னொரு விஷயத் தையும் இங்கே குறிப்பிட வேண்டியதிருக் கிறது. சிக்கந்தர் தர்கா கட்டப்பட்ட காலத்தி லிருந்தே அங்கு கந்தூரியின் போதும் சரி, பிற நாள்களிலும் சரி ஆடு, கோழிகளை அறுத்து நேர்ச்சை செய்யும் பழக்கம் இருந்து வருகின்றது. இதனைத் திருப்பரங்குன்றம் மக்கள் அனைவரும் அறிவர். அவர்களே அதற்குச் சாட்சி. எனினும், இந்துத்துவா அமைப்புகள் தர்காவில் ஆடு, கோழிகளை




அறுக்கத் தடை விதிக்க வேண்டும் என்று கோரிய வழக்கில் நீதிபதிகள் நிஷா பானுவும், ஸ்ரீமதியும் மாறுபட்ட தீர்ப்பினை வழங்கினர். நீதிபதி நிஷா பானு ஆடு, கோழிகளை அறுக்கத் தடையில்லை என்று தீர்ப்பளித்த நிலையில் நீதிபதி ஸ்ரீமதி ஆடு கோழிகளை அறுக்கக் கூடாது என்று தீர்ப்பளித்தார்.

இந்த மாறுபட்ட தீர்ப்பின் காரணமாக வழக்கு மூன்றாவது நீதிபதிக்குச் சென்றது. மூன்றாவது நீதிபதியான விஜயகுமார் நீதிபதி ஸ்ரீமதிக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தார். எனவே 2:1 என்ற அடிப்படையில் சிக்கந்தர் மலையில் ஆடு, கோழிகளை அறுக்கத் தடை விதிக்கப்பட்டது. எனினும் நீதிபதிகள் தர்கா நிர்வாகம் உரிமையில் நீதிமன்றத்தை அணுகி, தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து (அதாவது ஆடு, கோழிகளை அறுத்து நேர்ச்சை செய்ததற்கான ஆதாரங்களை) நிவாரணம் தேடிக் கொள்ளலாம் எனவும் ஆலோசனை கூறியுள்ளனர்.

இந்தத் தீர்ப்புகளில் காணப்படும் விநோ தம் என்னவென்றால், பன்னெடுங்காலமாக சிக்கந்தர் தர்காவில் நிலவி வந்த ஆடு, கோழிகளை அறுக்கும் பழக்கத்திற்குத் தடை விதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிடப் படுகிறது என்பதேயாகும்.

தமிழக அரசு இந்த விஷயத்தில் உறுதி யான நிலை எடுத்திருப்பது பாராட்டத்தக்கது. திருப்பரங்குன்றத்திலும், நாட்டின் பிற பகுதி களிலுமுள்ள பெரும்பான்மை சகோதர இந்து சமய மக்களும் நியாயத்தின் பக்கம் நிற்பது ஆறுதல் அளிக்கிறது.

**சை**யது இப்ராஹீமின் வாழ்க்கை சத்தமில்லாதது. அவர் தன்னை முன்னிறுத்திக் கொள்ளவில்லை; மேடைகளையும் விளம்பரங்களையும் நாடவில்லை. ஆனால் அவர் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் மற்றவர்களின் சிந்தனையில் ஒரு சிறிய மாற்றத்தை உருவாக்கியது. அறிவும் ஈமானும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல; அவை ஒரே மனிதனுக்குள் இணைந்து மனித குலத்திற்குச் சாட்சியாக மாற முடியும் என்பதை அவர் தனது வாழ்வால் நிரூபித்தார்.

2026 ஜனவரி 11 அன்று, புதுச்சேரியிலிருந்து சென்னைக்குச் செல்லும் வழியில், ஆராய்ச்சி, கல்வி சார்ந்த இஸ்லாமியக் கொள்கை மேம்பாட்டுக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றபோது ஏற்பட்ட விபத்து 2026 ஜனவரி 19 அன்று அவரது இறப்பிற்கு வழி வகுத்தது. இந்த இழப்பு ஒரு குடும்பத்திற்கோ ஓர் அமைப்பிற்கோ மட்டுமல்ல; கல்வி உலகம், சமூக இயக்கங்கள், மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரின் உள்ளங்களில் ஆழ்ந்த வெற்றிடத்தை உருவாக்கியது.

# இயக்கப் பயணத்திலேயே இன்னுயிர் நீத்த இனிய தோழன்

– முனைவர்
**B. சையது இப்ராஹீம்**
(1973 - 2026)



## திருச்சியில் உருவான அடித்தளம்

திருச்சிராப்பள்ளியில் பிறந்து வளர்ந்த சையது இப்ராஹீம் எளிய குடும்பச் சூழலில் வளர்ந்தவர். பள்ளிக் கல்வியை திருச்சியிலேயே முடித்த அவர், சிறு வயதி லிருந்தே மென்மையான பேச்சும், தெளிவான சிந்தனை யும் கொண்டிருந்தார். கிரிக்கெட், கால்பந்து, சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் காட்டிய சையது உடல் ஒழுக்கத்தையும் அறிவாற்றலையும் சமநிலையுடன் வளர்த்துக் கொண்டார்.

இந்தத் தொடக்க காலமே அவரது வாழ்க்கையின் அடித்தளமாக அமைந்தது. ஒழுக்கம், பொறுமை, சிந்தனை, பொறுப்பு பின்னாளில் அவர் எவ்வளவு உயர்ந்த இடங் களை அடைந்தாலும் இந்த அடித்தளம் ஒருபோதும் குலைய வில்லை.

## SIO திருச்சி: குழந்தைகள் வட்டம் மூலம் மாற்றத்தின் தொடக்கம்

மேற்படிப்பிற்காக சென்னைக்குச் செல்லும் முன்பே, சையது இப்ராஹீம் இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப் பில் (SIO) ஆர்வமாகச் செயல்பட்டார். திருச்சி கிளைத் தலைவராக இருந்த காலத்தில் அவர் குழந்தைகள் வட்ட வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார்.

அவர் உறுதியாக நம்பியது ஒன்று. மாற்றம் என்பது கட்டாயப்படுத்தி வரக் கூடாது; அது புரிதலிலிருந்து வர வேண்டும். பாடல்கள், நாடகங்கள், வினாடிவினா, அறிவியல் விளக்கங்கள் மூலம் குர்ஆனிய கருத்துகளை குழந்தைகளுக்குப் புரியவைக்கும் புதிய அணுகுமுறையை அவர் உருவாக்கினார். இதன் மூலம் குழந்தைகளிடம் கேள்வி எழுப்பும் மனப்பான்மை, தர்க்க ரீதியான சிந்தனை, வாழ்க்கையோடு இணைக்கும் திறன் வளர்ந்தது.

இந்த முயற்சி தேசிய அளவில் பாராட்டப் பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் அகில இந்தியத் தலைவரான சையத் சஆதத்துல்லா ஹுசைனி அன்றைக்கு SIO தேசியத் தலைவராக இருந்தபோது 'இந்தச் சிறார் வட்டத்தை இந்தியாவிற்கே ஒரு முன் மாதிரி' எனக் குறிப்பிட்டார்.

## அறிவியல் கல்வி: ஆழமான பயணம்

சையது இப்ராஹீம் 1991-1994 காலகட் டத்தில் திருச்சியின் ஜமால் முஹம்மது கல்லூரி யில் வேதியியல் துறையில் பட்டம் பெற்றார். அதன் பின்னர் குறுகிய காலம் தோல் தொழி லில் வேதியியலாளராகப் பணியாற்றினார். ஆனால் அவரது உள்ளார்ந்த விருப்பம் ஆழ மான அறிவியல் ஆராய்ச்சியிலேயே இருந்தது.

1996-1999 மெட்ராஸ் பல்கலைக் கழகத்தில் உயிர் இயற்பியலில் முதுகலைப் பட்டமும், 2005ஆம் ஆண்டில் அதே துறையில் முனைவர் பட்டமும் பெற்றார். டாக்டர் வசந்தா பட்டாபி அவர்களின் வழி காட்டுதலில், பாம்பு விஷப் புரதங்களின் முப்பரிமாண கட்டமைப்பை ஆராயும் மிகச் சவாலான ஆய்வை அவர் மேற்கொண்டார். இந்தப் பயணம் அவரது அறிவியல் வாழ்க் கைக்கு உறுதியான அடித்தளமாக அமைந்தது.

## Ph.D. காலமும் SIO மாநிலச் செயலாளரான பயணமும்

முனைவர் பட்டம் பயிலும் காலத்தி லேயே சையது இப்ராஹீம் SIO தமிழ்நாடு மாநிலச் செயலாளராகப் பொறுப்பு வகித்தார். மாநிலத் தலைமையகத்தில் தங்கி ஆய்வக ஆராய்ச்சியும் மாணவர் அமைப்பின் பணி களும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட்டன.

அந்தக் காலத்தில் உயிர் இயற்பியல் போன்ற கடின துறையில் Ph.D. செய்து கொண்டே, மாநில அளவிலான மாணவர் அமைப்பை வழிநடத்துவது மிகவும் அரிதான ஒன்று. இந்தச் சமநிலை, கல்வியும் ஈமானும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல; ஒன்றை ஒன்று வலுப்படுத்துபவை என்பதைக் காட்டி யது. அவர் இளைஞர்களிடம் அடிக்கடி நினைவூட்டியது இந்த உண்மையையே!'

## மாடல் உருவாக்கம்: குர்ஆனும் அறிவியலும் இணையும் இடம்

சையது இப்ராஹீமின் தனித்துவமான அடையாளம் மாடல் உருவாக்கம். ஒவ்வொரு கண்காட்சியிலும் அவர் உருவாக்கிய மாதிரிகள் குர்ஆனிய கருத்துகளையும் அறி வியல் சிந்தனையையும் இணைத்தவை.

கண்மூடித்தனமான நம்பிக்கையை அவர் ஒருபோதும் ஊக்குவிக்கவில்லை. 'சிந்தி யுங்கள், புரிந்து கொள்ளுங்கள், நடை முறைப்படுத்துங்கள்' என்பதே அவரது செய்தி. குழந்தைகள், இளைஞர்களை மாடல் களைத் தானே தயாரிக்கச் செய்து, அவர் களையே விளக்கச் செய்தார். இதன் மூலம் அவர் அறிவை மட்டும் அல்ல; நம்பிக்கை யையும் பொறுப்பு உணர்வையும் அடுத்த தலைமுறைக்கு ஒப்படைத்தார்.

## சர்வதேச ஆராய்ச்சி அனுபவம்

AIIMS, நியூ டெல்லியில் பேராசிரியர் டி.பி.சிங் அவர்களுடன் ஆராய்ச்சி செய்தார். பின்னர் 2004 முதல் 2011 வரை அமெரிக் காவின் ப்ரூக்ஹேவன் தேசிய ஆய்வகத்தில் முனைவர் பட்ட மேலாய்வைத் (Post Doctoral Fellowship) தொடர்ந்தார். மருந்து வடிவ மைப்பு, புற்றுநோய் உயிரியல், கட்டமைப்பு உயிரியல் ஆகிய துறைகளில் உலகளாவிய அனுபவம் பெற்றாலும் அவரது எளிமை ஒருபோதும் மாறவில்லை.

## புதுச்சேரி பல்கலைக்கழகம்: ஆசிரியர், வழிகாட்டி, முன்மாதிரி

15 ஆண்டுகள் கற்பித்தல், 27 ஆண்டுகள் ஆராய்ச்சி, 30க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், 8 முனைவர் மாணவர்கள் ஆகியன அவரது மகத்தான கல்விப் பங்களிப்பு. பல தேசிய கருத்தரங்குகள், பல்கலைக் கழகக் குழுக்களில் அவர் வகித்த பொறுப்புகள் அனைத்தும் அவரது நேர்மை யையும் ஒழுக்கத்தையும் வெளிப்படுத்தின. அவர் கற்றுக் கொடுத்தது பாடம் மட்டும் அல்ல; சிந்திக்கும் முறை, பொறுப்பு உணர்வு, நேர்மை ஆகியவற்றையும் கற்றுக் கொடுத்தார்.

## பண்பால் உயர்ந்த மனிதன்

உயர்ந்த கல்வி, சர்வதேச அனுபவம், தலைமைப் பொறுப்புகள் இருந்தபோதும் மென்மையான பேச்சு, மரியாதையான நடத்தை, நேர்மையான அணுகுமுறை ஆகியவைதான் அவரது அடையாளமாகத் திகழ்ந்தன.

## இறைநம்பிக்கையால் வார்த்தெடுக்கப்பட்ட ஓர் இல்லம்

பொது வாழ்க்கையில் அறிவு, சேவை, தலைமையால் அறியப்பட்ட சையது இப்ராஹீம் தனிப்பட்ட வாழ்க்கையில் ஓர் அமைதியான தந்தையாகவும், இறைநம்பிக்கையை மையமாகக் கொண்ட குடும்பத் தலைவராகவும் திகழ்ந்தார். அறிவியல் ஆய்வுகளும் சமூகப் பொறுப்புகளும் நிறைந்த சூழலில் கூட, குடும்பத்திற்கு அவர் ஒதுக்கிய நேரம், கவனம், துஆ - இவை அனைத்தும் திட்டமிட்டும் நேசத்துடனும் அமைந்தவை.

குழந்தைகளுக்கு இறைநம்பிக்கையை வார்த்தைகளால் மட்டும் அல்ல; வாழ்வின் வழியாக அவர் கற்றுக் கொடுத்தார். சுயக் கட்டுப்பாடு, ஒழுக்கம், அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை - இவை அவரது இல்லத்தின் இயல்பான பண்புகளாக மாறின. அதனால் தான், அவரது இறுதித் தருணங்களில் அவரது துணைவியாரும், 19 வயது மகளும், 18, 10 வயதுடைய மகன்களும் வெளிப்படுத்திய தவக்குல், பொறுமை, மரியாதை அவரது வாழ்க்கைப் பயிற்சியின் (தர்பியத்தின்) உயிருள்ள சாட்சியாக அனைவரின் இதயங்களிலும் பதிந்தது.

## முன்னோடியாக வாழ்ந்தவர் – முன்னோடியாகவே திரும்பியவர்

சையது இப்ராஹீம் எல்லா நற்காரியங்களிலும் முன்னே சென்றவர். அறிவில், சேவையில், சிந்தனையில், ஒழுக்கத்தில் அவர் ஒருபோதும் பின்னால் நின்றவர் அல்ல. அந்த முன்னேற்றம் சத்தமில்லாமல், முழுமையான ஈமானுடன் அமைந்தது. நற்காரியங்களில் முன்னோடியாக வாழ்ந்தவர். தனது படைப்பாளனிடம் திரும்பும் பயணத்திலும் முன்னோடியாகவே சென்றுள்ளார் என்ற உணர்வு நம்முடைய துயரத்திற்குள் ஓர் அமைதியான ஆறுதலாக மாறுகிறது.

அன்பு நண்பர் சையது இப்ராஹீம் திசை காட்டும் முன்னோடியாக எப்போதும் எங்களுக்கு முன் நடந்தவர். இன்று படைத்தவனிடம் திரும்பும் இந்தப் பயணத்திலும் முன்னோடியாகவே சென்று விட்டார்.

அல்லாஹ் நாடினால் நாளை மறுமையில் எங்களுக்கு முன்பே ஜன்னத்துல் ஃபிர் தௌஸில் சையது இப்ராஹீம் நுழைவார் என்ற நம்பிக்கை எங்கள் கண்ணீருக்குள் ஒரு துஆவாக மாறுகிறது.

அல்லாஹ் நண்பர் சையத் இப்ராஹீமை சிறந்தவர்களுடன் இணைப்பானாக! உயரிய சுவனப் பரிசை வழங்குவானாக! அவருடைய இந்தப் பேரிழப்பைத் தாங்கும் அழகிய பொறுமையை அவரது குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும் வழங்குவானாக!

**– முனைவர் அப்துல் அஜீஸ்**


**ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!**

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com


بسم الله الرحمن الرحيم
புனித நபியின் பொன்மொழிகள்
சுனனுந் நஸாயீ
6 பாகங்கள்
விலை: 3600/-
2999/-
சிறப்பு தள்ளுபடி விலையில்
தொடர்புக்கு : +91 94440 25000 | 95000 57860
RAHMATH PATHIPAGAM CH. PVT LTD
Acc. No : 33564934648
Ifsc Code : SBIN0002190
Bank : State Bank of India
Branch : Alwarpet
*terms and conditions apply
ரஹ்மத் பதிப்பகம்
இது ஒரு சென்னை ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனம்
6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி காலனி, மயிலாப்பூர், சென்னை 4
Whatsapp Business



# நம் வாழ்வில் மீண்டும் ஒரு ரமளான்

- A.R. **கமருன்னிசா ஜாபர் அலீ**

நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது ரமளான் மாதம். இம் மாதம் முஸ்லிம்களுக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்ட மகத்தான ஓர் அருட்கொடை. வாழ்வு முழுவதற்குமான வெற்றிக்கு வழிகாட்டும் ஓர் இறையச்சப் பயிற்சிக் காலமாகும். மனிதன் தன்னைத் தானே சீரமைத்து, வெற்றிப் பாதையில் பயணிக்க ரமளான் ஓர் உன்னத வாய்ப்பாக இருக்கின்றது.

ரமளானில் நோன்பு முதன்மையாக விளங்குகிறது. நோன்பு மனிதனுக்கு தன்னடக்கம், பொறுமையைக் கற்றுத் தருகிறது. பசி, தாகம் போன்றவற்றை இறைக்கட்டளைக் காகச் சகித்துக் கொள்வதன் மூலம் மன உறுதி வளர்கிறது. இந்த மன உறுதியே வாழ்க்கையில் வரும் சவால்களை இறையச்சத்தோடு எதிர்கொண்டு வெற்றியடைய உதவும் முக்கிய ஆயுதமாகும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘வெறுமனே உண்ணாமலும் பருகாமலும் இருப்பதல்ல நோன்பு. தீமையானவற்றிலிருந்தும் மானக்கேடானவற்றிலிருந்தும் விலகி இருப்பதாகும்’

ரமளானை நாம் அலட்சியப்படுத்தாமல் ஆர்வத்தோடு, முழுமையாகப் பயன்படுத்துவதே நாம் பெற்றிருக்கின்ற அறிவின் வெளிப்பாடாகும். ‘இது பெரும் பாக்கியங்கள் நிறைந்த ஒரு வேதமாகும். (நபியே!) இதனை நாம் உம்மீது இறக்கி அருளியுள்ளோம். இந்த மக்கள் இதனுடைய வசனங்களைச் சிந்திக்க வேண்டும்; அறிவுடையோர் இதிலிருந்து படிப்பினை பெற வேண்டும் என்பதற்காக!’ (திருக்குர்ஆன் 38:29)

### ரமளானை அனுபவிப்போம்

‘செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமையும்’ எனும் நபி மொழிக்கேற்ப உள்ளத்தைத் தயார் செய்து ரமளானைத் தூய எண்ணத்துடன் அணுக வேண்டும். புனித ரமளானில் இறைவழிபாடுகளை ஆர்வத்துடன் நிறைவேற்ற வேண்டும். ‘எவர் ஒருவர் ரமளான் மாதத்தில் ஏதேனும் ஒரு நன்மையை மனமார ஆற்றுகின்றாரோ அது

மற்ற மாதங்களில் கடமையாக்கப்பட்ட ஒரு செயலைப் புரிந்ததற்குச் சமமான நற்கூலியை பெற்றுத் தரும். எவர் இம் மாதத்தில் ஒரு கடமையான செயலை நிறைவேற்றினாரோ அது மற்ற மாதங்களில் 70 கடமைகளை நிறைவேற்றிய நற்கூலியைப் பெற்றுத் தரும்' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபி(ஸல்) அவர்கள், தாராளமாக வாரி வழங்கி உதவி புரிபவர்களாகத் திகழ்ந் தார்கள். ஆனாலும் புனித ரமளான் மாதம் வந்து விட்டாலோ நபி(ஸல்) அவர்களின் கொடை இன்னும் அதிகமாகிவிடும். ஜிப்ரீல் (அலை) அவர்கள் இரவில் வந்து திருக் குர்ஆனை ஓதிக் காண்பிக்கும் போதும் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் ஓதச் செய்து கேட்கும் போதும் அடுத்த நாள்களில் வேக மாக வீசும் காற்றைப் போல் நபி(ஸல்) அவர் களின் கொடை மிக அதிகமாகி விடும்'. - அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்(ரலி).

## உன்னத வாய்ப்பு

அல்லாஹ் மனிதர்களுக்கு அருளிய உன்னத வாய்ப்பான ரமளான் மாதம் வெறும் நோன்பு நோற்கும் காலம் மட்டும் அல்ல. மனிதன் மனிதனாக மிளிர்வதற்காக ஆண்டில் ஒரு முறை கிடைக்கும் உன்னத வாய்ப்பு. இதைச் சரியாகப் பயன்படுத்துவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும்.

ரமளானில் அல்லாஹ் தனது தனிப்பட்ட அருளை வழங்குகிறான். அதனால் கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொண்டு, புதிய வாழ்க்கையைத் தொடங்க ரமளான் சிறந்த சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

திருக்குர்ஆன் இறக்கி அருளப்பட்ட இந்த மாதத்தில் அதை அதிகமாக ஓதுதல், அதன் அர்த்தங்களைச் சிந்தித்தல், வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துதல் போன்றவையே மனிதனை நேர்வழியில் நிலைநிறுத்தும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இறைவன் கூறுகிறான்: ஒருவர் திருக் குர்ஆனை ஓதுவதிலேயே முழுமையாக ஈடு பட்டு இருக்கிறார் என்னிடம் பிரார்த்தனை புரிவதற்குக் கூட அவரிடம் நேரமில்லை என்றாலும் என்னிடம் வேண்டிப் பிரார்த் திப்போரை விட இத்தகைய அடியாருக்கு அவர் என்னிடம் கேட்காமலேயே அதிகமாக வழங்குவேன்'.

'திருக்குர்ஆனை ஓதுவதால் ஓர் அடி யான் மற்றவர்களை விடவும் அல்லாஹ்விடம் அதிக நெருக்கத்தைப் பெறுகின்றான்' என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மட்டு மின்றி நபி(ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை ஓதும் போது ஒவ்வொரு எழுத்தையும் தனித் தனியாக உச்சரித்து தெளிவாக ஓதுவார்கள்.

'உலகில் திருக்குர்ஆனை மகிழ்ச்சியாக வும் நிறுத்தி அழகாகவும் ஓதியவர்களிடம் இறைவன் மறுமையில், 'நீங்கள் ஓதுங்கள் உலகில் எவ்வாறு திருக்குர்ஆனை நிறுத்தி நிதானமாக அழகான முறையில் ஓதினீர்களோ அவ்வாறே இங்கும் ஓதுங்கள். இன்னும் நீங்கள் ஓதும் ஒவ்வொரு வசனத்திற்கும் அது இறுதியை அடையும் வரை ஒரு படித்தரம் சுவனத்தில் உயர்ந்து கொண்டே செல்லும் என்று இறைவன் கூறுவான்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

தினமும் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டும் அதன்படி செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவரின் உதாரணம் கஸ்தூரியால் நிரப்பப் பட்டு திறந்து வைக்கப்பட்ட பையைப் போன்றதாகும். அதிலிருந்து நறுமணம் வெளியாகிக் கொண்டிருக்கும்.

பொய், புறம் பேசுதல், கோள் சொல்லுதல், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல், வீணான காரி யங்களில் பங்கேற்பது, அரட்டை அடிப்பதில் நேரத்தை வீணடித்தல் போன்ற நோன்பின் பயனைக் கெடுக்கும் எந்த ஒரு செயலிலும் ஈடுபடாமல் நம்மைத் தடுக்கும் கேடயமாக ரமளானை பயன்படுத்த வேண்டும். அதிக நன்மைகளே தீமைகளை அழித்துவிடும்.

ரமளான் எனும் உன்னத வாய்ப்பை வெற்றிப் பாதையாகப் பயன்படுத்தி ஈருலக வெற்றி காண்போம். அதுவே ரமளானின் நோக்கமாகும்.




மேடை
31

*2025 டிசம்பர் 17ஆம் நாள் ஹைதராபாத்தில் APCR ஏற்பாடு செய்த Longing for Justice நிகழ்வில் திரைக்கலைஞர் **பிரகாஷ் ராஜ்** ஆற்றிய உரையின் தமிழாக்கம் இந்த இதழின் மேடையை அலங்கரிக்கின்றது.*

# நீதிமன்றங்களே நீதியைக் கொலை செய்கின்றன!

இங்கே இருப்பவர்கள் ஒவ்வொருவரையும் நான் அறிவேன். நாம் அனைவரும் சேர்ந்து சுமக்கும் வலியின் காரணமாக நான் உங்களை அடையாளம் காண்கிறேன். தொடர்ந்து போராடும் மன உறுதியின் காரணமாக உங்களை என்னால் எளிதில் அடையாளம் காண முடிந்தது.

சில மாதங்களுக்கு முன்பு நான் டெல்லியில் அரசியல் கைதிகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். இன்று நான் உமர் காலித் குறித்துப் பேச விரும்பவில்லை. அவர் யார் என்பது நம் அனைவருக்கும் தெரியும். டெல்லியில் நான் சொன்னதையே இங்கேயும் மீண்டும் கூற விரும்புகிறேன். தயவுசெய்து இதைப் புரிந்து கொள்ள முயலுங்கள்.

இந்த நாட்டில் இப்போது நடந்துகொண்டிருப்பவை அனைத்தும் இனப்படுகொலைக்கான (Genocide) ஆயத்தப் பணிகளே! அவர்கள் முஸ்லிம்கள், பழங்குடியினர், சிறுபான்மையினரை முற்றிலுமாகத் துடைத்தெறிய விரும்புகிறார்கள். அதுதான் அவர்களின் செயல் திட்டம். நாம் விதிகள் ஒழுங்குமுறைகளைப் பற்றிப் பேசலாம். ஆனால் அவர்களுக்கு எதைப் பற்றியும் கவலையில்லை. அவர் களுக்கு மனசாட்சியே கிடையாது.

'தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி' என்று உலகம் முழுவதும் நாம் மீண்டும் மீண்டும் கூறி வருகிறோம். இந்த வாசகம் ஏன் உருவானது? இந்திய விடுதலைக்குப் பிறகு இந்த நாட்டில் நமக்கென காவல் நிலையங்கள் இருந்தன. ஆனால் காங்கிரஸ் உட்பட அனைத்து அரசியல்வாதிகளும், சட்டவிரோதமான, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிற, ஊழல் நிறைந்த காவல் நிலையங்களை உருவாக்கினர். இதனால் சாமானிய மனிதன் காவல் நிலையத்திற்குச் செல்லவே பயந்தான். குழந்தைகள் காவல் துறையைக் கண்டு அஞ்சினர்.

இருப்பினும், கடந்த ஒன்றரை அல்லது இரண்டு தசாப்தங்களுக்கு முன்புவரை, ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டாலோ, யாராவது நம் குரலை ஒடுக்க முயன்றாலோ அல்லது நமக்கு எதிராக அதிகாரத்தைப் பயன்படுத்தினாலோ நாம் ஒரு வார்த்தையைச் சொல்வோம்: 'உங்களை நான் நீதி மன்றத்தில் பார்த்துக் கொள்கிறேன்.'

நாம் ஏன் அப்படிச் சொன்னோம்? ஏனெனில் நீதிமன்றமே நமது இறுதி நம்பிக்கையாக இருந்தது. நீதிமன்றத்தில் நமக்கு நீதி கிடைக்கும் என்று நாம் உறுதியாக நம்பினோம். ஒரு நீதிமன்றம் எந்த அரசியல் கட்சிக்கும், ஆளும் அரசாங்கத்திற்கும் அல்லது எந்த மத நிறுவனத்திற்கும் சொந்தமானது அல்ல என்பதில் நாம் உறுதியாக இருந்தோம்.

ஆனால் வருத்தத்திற்குரிய விசயம் என்னவென்றால், இன்று நான் இந்தத் துணிச்சலான கூற்றை முன்வைக்கிறேன். இந்திய நீதிமன்றங்களே, உங்களுக்கு வெட்கமாக இல்லையா? நீதியைக் கொலை செய்வது என்ற மிகப் பெரிய குற்றத்தை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

> இந்த நாட்டில் இப்போது நடந்து கொண்டிருப்பவை அனைத்தும் இனப்படு கொலைக்கான (Genocide) ஆயத்தப் பணிகளே! அவர்கள் முஸ்லிம்கள், பழங்குடியினர், சிறுபான்மையினரை முற்றிலுமாகத் துடைத்தெறிய விரும்புகிறார்கள். அதுதான் அவர்களின் செயல்திட்டம்.

நீங்கள் பாஜகவுடன் போராடுகிறீர்களா? பாஜகவுடன் போராடாதீர்கள். நீங்கள் RSS உடன் தான் போராட வேண்டும். ஹிட்லர் ஏன் தோல்வியடைந்தார்? முசோலினி ஏன் தோல்வியடைந்தார்? ஏனெனில் அவர்கள் ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கினார்கள். ஆனால் இங்கே, RSS என்பது ஓர் அரசியல் கட்சி அல்ல.

ஒரு நாடகத்திற்காக நான் 'பஞ்சதந்திரம்' படித்துக்கொண்டிருந்தேன். அதில் ஒரு குளம் இருக்கும். அதற்குள் கண்ணுக்குத் தெரியாத ஒரு அரக்கன் இருப்பான். ஆனால் மேலே ஒரு தாமரை மலர்ந்திருக்கும். நீங்கள் அந்தத் தாமரையுடன் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். அந்தத் தாமரைக்கு வலிமை தரும் ஆழமான வேர்களுடன் போராடுங்கள். இந்த அமைப்புக்கு எதிராகவும், நீதிபதிகளுக்கு எதிராகவும் நீங்கள் செய்யும் போராட்டங்கள் எதுவும் பலனளிக்காது.

இந்த நாட்டில் ஓர் அமைப்பு இருக்கிறது, இந்திய விடுதலைக்காகப் போராடினோம் என்று சொல்லிக்கொள்ள அந்த அமைப்பில் ஒருவருடைய பெயரோ அல்லது இருவருடைய பெயர்களோ கூட கிடையாது. ஒரே ஒரு பெயர் கூட இல்லை. அவர்கள் நம் இந்திய தேசியக் கொடியை ஒருபோதும் ஏற்ற மாட்டார்கள்.

அண்மையில் பிரதமர் மோடியிடமிருந்து எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. உங்களில் பலருக்கும் கடந்த 26ஆம் தேதி அது வந்திருக்கலாம். அது எனக்கு எரிச்சலைத் தந்தது. ஏனெனில் அது எனது தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி. அவர் என் நண்பர் கிடையாது, எனது முகவரியை நான் அவரோடு பகிரவும் இல்லை. அப்படியானால் நம்முடைய தரவுகள் (Data) அனைத்தும் அவர்களிடம் இருக்கின்றன.

**அவர்களின் செயல்திட்டம் இனப்படுகொலை. அவர்களின் செயல் திட்டம் மனுஸ்மிருதியை மீண்டும் கொண்டு வருவது. அவர்களின் செயல்திட்டம் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவது. ஏனெனில் அவர்களுக்கு அதில் உடன்பாடில்லை. நீங்கள், நான், உமர் என நாம் அனைவரும் இரண்டாம் தரக் குடிமக்களாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.**

அந்தக் கடிதம் முழுவதும் பொய்களால் நிரம்பியிருந்தது. அழகான பொய்கள். அவர் சொல்கிறார். ‘இந்த நாட்டில் அரசியலமைப்புச் சட்டம் இல்லையென்றால், ஒரு சாதாரண நிலையிலிருந்து நான் இந்த நிலைக்கு உயர்ந்திருக்க முடியாது. அம்பேத்கர் ஒரு மாபெரும் மனிதர், மகாத்மா காந்தி ஒரு மாபெரும் மனிதர்’ என்றெல்லாம் அதில் இருந்தது. அவர் எவ்வளவு பெரிய பொய்யர்!

அதற்கு முந்தைய நாள், அதாவது 25ஆம் தேதி பார்த்த காட்சிகள் என் நினைவுக்கு வந்தன. பிரதமரும் RSS தலைவரும் முன்னிலையில் இருக்க ராம்மந்திரில் ஒரு கொடி ஏற்றப்பட்டது. அந்தக் காவிக்கொடி மேலே ஏறும்போது நமது பிரதமரின் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. நான் வியந்தேன். இந்த மனிதருக்கு உண்மையிலேயே நமது தேசியக் கொடியின் மீது மரியாதை இருக்கிறதா? இல்லை. அவர்களின் செயல் திட்டம் வேறானது.

அவர்களின் செயல்திட்டம் இனப்படுகொலை. அவர்களின் செயல் திட்டம் மனுஸ்மிருதியை மீண்டும் கொண்டு வருவது. அவர்களின் செயல்திட்டம் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவது. ஏனெனில் அவர்களுக்கு அதில் உடன்பாடில்லை. நீங்கள், நான், உமர் என நாம் அனைவரும் இரண்டாம் தரக் குடிமக்களாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

இந்த ஊடகங்களின் வாயிலாக நான் சாமானிய மனிதனிடம் சொல்கிறேன். விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள். இன்று அவர்கள் முஸ்லிம்களைத் தேடி வருகிறார்கள். நாளை அவர்கள் உங்களுக்காக வருவார்கள்.

தொடர்ந்து குரல் கொடுப்பது ஒன்றே ஒரே வழி. காலவரிசையைப் (Chronology) புரிந்து கொள்ளுங்கள். கௌரி லங்கேஷ் கொல்லப்பட்டார். ஆயுதம் கண்டறியப்பட்டது. கௌரி, பன்சாரே, தபோல்கர், கல்புர்கி என இந்துத்துவாவுக்கு எதிராகப் பேசியவர்கள் அனைவரும் வரிசையாகக் கொல்லப்பட்டது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகளில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட நிலையிலும் அவர்கள் பிணையில் வெளியே வருகிறார்கள். RSS பஜ்ரங்தள் அமைப்பினர் அவர்களுக்கு வெளியே மாலை அணிவித்து வரவேற்கிறார்கள்.

பிரிஜ் பூஷன், குல்தீப் செங்கார் போன்ற பாலியல் வன்புணர்வு குற்றவாளிகள் வெளியே வருகிறார்கள். தேர்தல் நேரத்தில் வெளியே வந்து பாஜவுக்காக வாக்குகளைப் பெற்றுத் தந்துவிட்டு, மீண்டும் உள்ளே செல்கிறார்கள். அவர்களின் செயல்திட்டம் தெளிவானது. ஜனநாயகத்தைக் கொல்ல வேண்டும், அனைத்து அமைப்புகளையும் அழிக்க வேண்டும்.

நாம் விழித்தெழ வேண்டிய நேரம் இது. நமது குரல்களை உயர்த்தி அவர்களிடம் சொல்ல வேண்டிய நேரம் இது. ‘நாங்கள் இங்கேதான் இருக்கிறோம். நாங்கள் பயப்படவில்லை. நாங்கள் தொடர்ந்து உண்மையைப் பேசுவோம். நீங்கள் எங்களிடம் நூறு முறை பொய் சொன்னால், நாங்கள் ஆயிரம் முறை உண்மையைப் பேசுவோம்.’ வாழ்த்துகள். நன்றி.


Digital Hub
unit of The Chennai Mobiles
வீட்டிற்கு தேவையான அனைத்து
அப்ளையன்சஸ்கள் ஒரே இடத்தில்..!
MOBILES
LAPTOPS
GADGETS
SMART TV
WASHING MACHINE
REFRIGERATOR
AIR CONDITIONER
KITCHEN APPLIANCES
15%* UPTO CASH BACK
EXCHANGE BONUS UPTO ₹5000*
0%* NO COST EMI
NO COST EMI*
EXCHANGE OFFER
FREE SURPRISE GIFTS
LATEST MODELS
T&C Apply*
The Chennai Mobiles®
99444 12345, 89405 12345
www.thechennaimobiles.com

# இறைவனே வசப்படுத்திக் கொடுத்தான்!

இவர்கள் தங்களுக்கு முன்னாலும், பின்னாலும் சூழ்ந்துள்ள வானத்தையும் பூமியையும் என்றுமே பார்த்ததில்லையா, என்ன? நாம் நாடினால் இவர்களைப் பூமிக்கடியில் ஆழ்த்தியிருப்போம். அல்லது வானத்தின் சில துண்டுகளை இவர்கள் மீது விழச் செய்திருப்போம். இறைவன் பக்கம் திரும்புகின்ற ஒவ்வோர் அடியானுக்கும் உண்மையில் இதில் ஒரு சான்று இருக்கின்றது.[13]

நாம் தாவூதுக்கு நம்மிடமிருந்து பெரும் அருட்பேற்றினை வழங்கியிருந் தோம்.[14] (நாம் ஆணையிட்டோம்:) 'மலைகளே! அவருடன் சேர்ந்து நீங்களும் துதி பாடுங்கள். இவ்வாறே பறவைகளுக்கும் (நாம் கட்டளையிட்டிருந் தோம்.)[15] நாம் அவருக்காக இரும்பை மென்மையாக்கிக் கொடுத்தோம். 'போர்க் கவசங்கள் செய்வீராக! அவற்றின் வளையங்களைச் சரியான அளவில் அமைப்பீராக' என்ற கட்டளையுடன்![16] (தாவூதுடைய வழித்தோன்றல்களே!) நற்செயல்கள் புரியுங்கள்; நீங்கள் செய்வதனைத்தையும் நான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

மேலும், நாம் ஸுலைமானுக்குக் காற்றை வசப்படுத்திக் கொடுத்தோம். அதனுடைய காலைப் புறப்பாடு ஒரு மாத தூரம் வரையிலாகும்; மாலைப் புறப்பாடும் ஒரு மாத தூரம் வரையிலாகும்.[17] நாம் அவருக்காக உருக்கிய செம்பின் ஊற்றை ஓடச் செய்தோம்.[18] மேலும், ஜின்களையும் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம். அவைகளோ தம் இறைவனின் கட்டளைப்படி பணிபுரிந்து கொண்டிருந்தன.[19] அவற்றில் எது நம்முடைய கட்டளையை விட்டும் பிறழ்கின்றதோ அதனைக் கொழுந்து விட்டெரியும் நெருப்பின் வேதனையைச் சுவைக்கும்படிச் செய்வோம்.

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 9 - 12**

---

**13.** எவருடைய மனதில் எந்தவிதமான துவேஷமோ, முன்முடிவோ, பக்கச்சார்போ மருந்துக்கும் இல்லையோ, எவரிடம் எந்த வொரு பிடிவாதமும், முரண்டுபிடிக்கின்ற போக்கும் இல்லையோ, அவற்றுக்குப் பதி லாக எவர் வாய்மையான உள்ளத்தோடு தம்முடைய இறைவனிடம் வழிகாட்டுதலை வேண்டுபவராக இருக்கின்றாரோ அவரால் இந்தப் பூமி, இந்த வானங்கள் ஆகியவற்றைக் கொண்ட இந்தக் கட்டமைப்பைப் பார்த்து மிகப் பெரும் பாடம் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் எவருடைய இதயம் இறைவனி டமிருந்து முகம் திருப்பிக் கொண்டிருக் கின்றதோ அவர் இந்தப் பேரண்டத்தில் இருக் கின்ற அனைத்தையும் பார்ப்பார்; ஆனால் பேருண்மையின் பக்கம் சமிக்ஞை செய் கின்ற எந்தவொரு அடையாளத்தையும் அவரால் புரிந்து கொள்ளவே இயலாமல் போய்விடும்.

**14.** வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் தாவூத்(அலை) அவர்களுக்கு அருளியிருந்த கணக்கற்ற அருள்வளங்கள் குறித்து இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

*28 ஆம் பக்கம் பார்க்க...*

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# வட்டியின் நுழைவாயில்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**‘உங்களில் ஒருவர் இன்னொருவரிடம் கடன் கொடுத்தால், உங்களிடம் கடன் வாங்கியவர் உங்களுக்கு ஏதேனும் ஒன்றை அன்பளிப்பாக அளித்தாலோ, அல்லது பயணம் போவதற்காக (குதிரையையோ, ஒட்டகத்தையோ) பிராணியைக் கொடுத்தாலோ அவர் அந்தப் பிராணியில் ஏறி எங்கேயும் போகவும் கூடாது. அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட பொருளை வாங்கவும் கூடாது. கடன் கொடுப்பதற்கு முன்பு இத்தகைய கொடுக்கல் வாங்கல் இருந்தாலே தவிர.’**

அறிவிப்பாளர் : அனஸ்(ரலி)
நூல் : இப்னு மாஜா, பைஹகி

இன்னொரு அறிவிப்பில் ‘ஒருவர் இன்னொருவருக்காகப் பரிந்துரை செய்திருந்து, அவரால் பரிந்துரைக்கப்பட்டவர் அவருக்கு அன்பளிப்பு அளிக்க, அதனை அவர் ஏற்றுக்கொள்வாரேயானால் திண்ணமாக அவர் வட்டியின் நுழைவாயில்களில் மிகப் பெரும் நுழைவாயிலின் ஊடே உள்ளே நுழைந்தவராகின்றார்’ என்கிற வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

இஸ்லாம் வட்டியைத் தடை செய்ததுடன் அதற்கும் மேலாக வட்டிக்கான மறை முகமான, நேரடியான அனைத்துவிதமான வடிவங்களையும் வழிவகைகளையும் முற்றாகத் தடை செய்துள்ளது என்பதை மேலே தரப்பட்ட நபிமொழிகள் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன. ஒருவருக்குக் கடன் கொடுத்து அவரிடமிருந்து இலாபத்தை ஈட்டுவதுதான் ரிபா (வட்டி) ஆகும். இதனால்தான் கடன் பெற்றவரிடமிருந்து அன்பளிப்பைப் பெறுவதும் அவருடைய வாகனத்தைப் பயன்படுத்துவதும் தடுக்கப்பட்டுள்ளது.

இதே போன்று ஒருவருக்காகப் பரிந்துரைத்த பிறகு அவரிடமிருந்து அன்பளிப்பைப் பெறுவதும் தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தம்மால் பரிந்துரைக்கப்பட்ட மனிதரிடமிருந்து அன்பளிப்புப் பெறுவதும் தடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் சுயஇலாப நோக்கமின்றி செய்யப்படுவதுதான் பரிந்துரை. அதற்காக தம்மால் பரிந்துரைக்கப்பட்ட மனிதரிடமிருந்து அன்பளிப்பை ஒருவர் ஏற்றுக்கொள்கின்றார் எனில், அது அந்த நற்செயலிலிருந்தும் பயனீட்டிக் கொள்ள வேண்டும் என்பதில் அவருக்கு இருக்கின்ற ஆசையை வெளிப்படுத்துகின்றது.

வட்டியிலும் இதுதான் நடக்கின்றது. கடன் கொடுக்கின்றவர் அந்த நற்செயலிலிருந்து (தேவையுள்ளவருக்கு பணம் கொடுத்து உதவுகின்ற நற்செயல்) இலாபம் ஈட்டப் பார்க்கின்றார். இத்தனைக்கும் எந்தவிதமான இலாப நோக்கமோ, பிரதி பலனோ எதிர்பாராமல் ஆற்றப்பட வேண்டிய நற்செயல்தான் அது. தன்னுடைய சகோதரருக்குத் தேவை ஏற்படுகின்ற வேளையில் அவருக்கு உதவுவதும், அவருடைய கவலைகளைப் போக்குவதும் சகோதரர் என்கிற முறையில் எந்தவொரு மனிதர் மீதும் இருக்கின்ற கடமையாகும். இன்னும் சொல்லப்போனால் தேவையுள்ள மனிதரின் உரிமை அது.

**நபிமொழி விளக்கம் ✶ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✶ தமிழில் : அபூ ஹானியா**

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

தாவூத்(அலை) பெத்லஹேம் நகரில் வசித்து வந்த யஹோதா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண இளைஞராக இருந்தார். ஃபிலிஸ்தியர்களுக்கு எதிரான போர் ஒன்றில் ஜாலூத்தைப் போன்ற மிகப் பெரும் வலிமை வாய்ந்த எதிரியைக் கொலை செய்து திடீரென்று அவர் பனூ இஸ்ராயில்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, மனங்கவர் நாயகனாக உயர்ந்து விட்டார். இந்த நிகழ்விலிருந்து அவருடைய எழுச்சி தொடங்கியது. எதுவரை எனில் தாலூத்தின் மரணத்திற்குப் பிறகு முதலில் அவர் ஹெப்ரான் (தற்போதைய கலீல்) நகரத்தில் யஹூதியா மக்களின் தலைவராக ஆக்கப் பட்டார்.

பிறகு சில ஆண்டுகளுக்குள் பனூ இஸ்ராயீல்களின் ஒட்டுமொத்த கோத்திரத்தாரும் ஒன்று சேர்ந்து அவரைத் தம்முடைய அரசனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். மேலும் அவர் ஜெருசலேம் நகரத்தை வென்றெடுத்து அதனை இஸ்ராயீல் தேசத்தின் தலைநகரமாக ஆக்கிக் கொண்டார். அவருடைய சீரிய தலைமையினால் வரலாற்றில் முதல் முறையாக இறைப்பற்று நிறைந்த இராஜ்ஜியம் உருவானது. அதன் எல்லைகள் அகபா வளைகுடா முதல் ஃபுராத் நதியின் மேற்குக் கரைகள் வரை பரவியிருந்தன. இந்த அருள்வளங்களோடு கூடுதலாக அவருக்கு அருளப்பட்ட இறைக் கொடைகளாய் அறிவு, ஞானம், நீதி, நியாயம் செறிந்த செயல்பாடு, இறைப்பற்றும், இறைவனுக்கு அடிபணிந்து பேணுதலோடு வாழ்கின்ற பக்குவமும் போன்ற வடிவங்களில் அவருக்குக் கிடைத்தன. (விவரங்களுக்குப் பார்க்க : திருக்குர்ஆன் 2:273; 17:7)

**15.** இதே கருத்து இதற்கு முன்பு அத்தியாயம் 21 அல்அன்பியாவில் வசன எண் 79இல் இடம் பெற்றிருந்தது. அங்கு இது குறித்த விளக்கங்களை நாம் அளித்து இருந்தோம். விளக்கத்துக்குப் பார்க்க : திருக்குர்ஆன் 21:71.

**16.** இந்தக் கருத்தும் இதற்கு முன்பு திருக்குர்ஆன் 21:80இல் இடம் பெற்றிருந்தது. மேலும் அங்கு இது தொடர்பான விளக்கத்தை நாம் அளித்து இருந்தோம். விளக்கத்துக்குப் பார்க்க: திருக்குர்ஆன் 21:72.

**17.** இந்தக் கருத்தும் இதற்கு முன்பு திருக்குர்ஆன் 21:81இல் இடம் பெற்றிருந்தது. மேலும் அங்கு இது தொடர்பான விளக்கம் தரப்பட்டிருந்தது. விளக்கத்துக்குப் பார்க்க திருக்குர்ஆன் 21:74,75.

**18.** பூமியிலிருந்து சுலைமான்(அலை) அவர்களுக்காக ஊற்று ஒன்று வெடித்து பெருக்கெடுத்து ஓடியதாகவும் அதில் தண்ணீருக்குப் பதிலாக உருகிய செம்பு பெருக்கெடுத்தோடியதாகவும் தொன்மையான விரிவுரையாளர்கள் சிலர் இதற்குப் பொருள் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் சுலைமான்(அலை) அவர்களின் காலத்தில் செம்பை உருக்குகின்ற, உருகிய செம்பைக் கொண்டு விதவிதமான பொருள்களை உருவாக்குகின்ற தொழில் எந்த அளவுக்குப் பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனில் அங்கு செம்பின் ஊற்றுகளே பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தன எனச் சொல்லப்பட்டது என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். (கூடுதல் விவரங்களுக்குப் பார்க்க : திருக்குர்ஆன் 21:74,75)

**19.** சுலைமான்(அலை) அவர்களுக்கு ஜின்கள் வசப்படுத்தித் தரப்பட்டிருந்தன. அவர்கள் விவசாயப் பெருங்குடிகளும் மலைவாழ் பெரு மக்களுமா அல்லது உண்மையிலேயே கண்களுக்குப் புலப்படாத படைப்புகளாய் உலகம் முழுவதும் அறிப்படுகின்ற ஜின்களா என்பது குறித்து இதற்கு முன்பு அத்தியாயம் 21 அல்அன்பியாவிலும் அத்தியாயம் 27 அந்நம்லிலும் விரிவாக விவாதித்திருக்கின்றோம். (விவரங்களுக்குப் பார்க்க: திருக்குர்ஆன் 21:75; 27:23, 45,52)

*(தொடரும்)*

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 29வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2026 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2025லிருந்து 2026 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

### உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

தொடர்பு கொள்வீர்
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

# ஹபீபி

## தொடர் செயல்பாடாக மாற வேண்டும்

இயக்குநர்
**மீரா கதிரவன்**
நேர்காணல்

சந்திப்பு: **நாகூர் ரிஸ்வான்**

**இஸ்லாம் எவ்வளவு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் முஸ்லிம்களின் உண்மையான வாழ்வியலை பிற மதத்தினரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் இந்தப் படம் எடுக்கப்பட்டிருக் கின்றது. இது இஸ்லாமி யர்களுக்கான படம் அல்ல. எல்லாருக்குமான படம்.**



*கடந்த இதழ் தொடர்ச்சி..*

- **முஸ்லிம்களின் வீடுகளுக்குள் செல்ல முடியாது என்ற நிலையில் முஸ்லிம் சமுதாயத்தின் மூலைமுடுக்கெல் லாம் பதிவு செய்துவிட்டீர்களே எப்படிச் சாத்தியமானது?**

முஸ்லிம்களின் வீடுகளுக்குள் செல்ல முடியாது என்ற கருத்தை நான் முற்றிலும் மறுக்கின்றேன். இஸ்லாமியர்கள் குறித்து கட்டமைக்கப்பட்டிருக்கின்ற எத்தனையோ கற்பிதங்களைப் போல இதுவும் ஒரு கற்பிதமே! உண்மை அதுவல்ல. இஸ்லாமியர்கள் வீடுகள் என்றில்லை எந்த வீட்டிலும் ஓர் அந்நியர் அவ்வளவு எளிதாக நுழைந்துவிட முடியாது. சினிமா குறித்த ஓர் அச்சம் என்பது எல்லாச் சமூகத்திலும் இருக்கிறது.

சினிமாவையே பார்த்திடாத, ஒரு குறும்படப் படப் பிடிப்புகூட நடந்திடாத ஓர் ஊருக்குள்ளே அந்த ஊரைச் சாராத நூற்றுக்கும் அதிகமான தொழில்நுட்பக் கலைஞர்கள், லைட்ஸ், கேமரா, கிரேன் உட்பட உபகரணங்களை எடுத்துச் செல்வது கடினமாகத்தான் இருந்தது. நெருக்கமாக இடைவெளி இல்லாமல் கட்டப்பட்ட வீடுகள், கூட்டாக வாழும் மக்கள் மத்தியில் அதுவரை அவர்கள் பார்த்திடாத ஒரு படப்பிடிப்பை நிகழ்த்துவது சவாலான விஷயம்தான்.

அந்த ஊர் மக்களுக்கு மட்டுமல்ல சினிமா குறித்து எல்லாருக்குமே ஒரு பயம் இருக்கிறது. எல்லாக் காலங் களிலும் இஸ்லாமியர்கள் குறித்த புரிதல் இல்லாமல் எதிர்தரப்பில் நிறுத்துகின்ற படங்கள் தொடர்ச்சியாக தமிழ்ச் சினிமாவில் உருவாக்கப்படுகின்றது. இந்த உலகத் துடன் பொருந்திப்போகாத மனிதர்களாக அவர்கள் தனி உலகில் வாழ்வதைப் போல சினிமா இதுவரை காட்டி யிருக்கின்றது.

நம்மைக் குறித்து தவறாகச் சித்திரிப்பதற்கு நாமே துணைபோய் விடக்கூடாது என அவர்கள் யோசித்திருப் பார்கள். ஏனெனில் அதற்குமுன் அப்படி யான அனுபவங்கள் இருக்கின்றது. அதற்குக் காரணமே இங்கு உருவாக்கப் பட்ட படங்கள்தான். அப்படியான மன நிலையில் இருக்கும் மக்களிடம் அந்த அச்ச உணர்வைத் தவறு என்று சொல்ல வும் முடியாது. தொடர்ந்து காலம்காலமாக கல்லடிபடுகின்ற ஒரு சமூகம் தங்களை வைத்தே, தங்களுக்கு எதிராக சினிமா எடுத்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு இருப்பது தவறல்ல.

அப்படிப்பட்ட சூழலில் அந்த மக்களிடம் இது இஸ்லாமியர்களுக்கு எதிரான படம் அல்ல. எல்லாரும் போல நாங்களும் இரத்தமும், சதையுமான மனிதர்கள்தாம். எங்களுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கின்றது. நாங்கள் வேறல்ல நாங்கள் ஏற்றிருக்கின்ற மார்க்கம், எங்களுடைய வழிபாடு போன்றவைதான் வித்தியாசப்படுகின்றதே தவிர மற்றபடி வாழ்க்கை, இந்த உணர்வு எல்லா மனிதர்களுக்கும் இருப்பதைப் போல்தான் எங்களுக்கும் இருக்கின்றது. நாங்களும் மனிதர்கள்தாம் என்று அவர்களுக்குப் புரிய வைப்பதற்காக எங்களுக்கு ஓர் அவகாசம் தேவைப்பட்டது. அதைப் புரிந்துகொண்ட பிறகு மிகவும் ஒத்துழைத்தார்கள்.

இந்தப் பட உருவாக்கத்தில் கடையநல்லூர் மக்கள் மிகவும் ஆத்மார்த்தமாக, மனப்பூர்வமான பங்களிப்பைச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் இல்லாமல் இந்தப் படம் சாத்தியமே இல்லை. நிச்சயமாக வெவ்வேறு நிலப்பரப்பைக்கொண்டு வெவ்வேறு வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கக்கூடிய இஸ்லாமியர்களின் வெவ்வேறு கதைகளைப் பேசுவதற்கு, அவர்களின் வாழ்விடத்திலேயே சென்று பதிவு செய்வதற்கு அனுமதிப்பதற்கான நம்பிக்கையை இந்தப் படம் உருவாக்கியிருக்கிறது.




இந்தத் தயக்கத்தை உடைத்து இந்தப் படம் கடையநல்லூரில் எடுப்பதற்கு முக்கியமாக இரண்டு நபர்களைச் சொல்ல வேண்டும். இந்தப் படத்தின் திரைக்கதை ஆசிரியர் அமீனும், அவருடைய மாமா விஸ்வா ஷாபி அவர்களும் இந்தப் புரிதலை அவர்களுக்கு ஏற்படுத்தினார்கள். அவர்கள் இல்லாமலும் இந்தப் படம் சாத்தியமே இல்லை. மிகவும் ஆத்மார்த்தமாக, பெரிய உழைப்பை அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள்.

■ **அண்டை மாநிலமான கேரளாவில் நிறைய இஸ்லாமிய வாழ்வியல் சினிமாக்கள் சாத்தியமாகும்போது தமிழ்ச் சினிமாவில் அது நிகழ்வதற்கு ஒரு நூற்றாண்டு பிடித்திருக்கிறதே..!**

மலையாள சினிமாவில் இஸ்லாமியர் வாழ்வு சாத்தியமானதற்குப் பல காரணங்கள் உள்ளன. உலகம் முழுவதும் எல்லா இடங்களிலும் சிதறிக்கிடந்தபோதும் சாதி, மதம் கடந்து மொழியின் அடிப்படையில் ஒருங்கிணையக் கூடிய பண்பு அவர்களிடம் இருக்கிறது. இஸ்லாமியர்களும் அதிக அளவில் அங்கே இருக்கின்றார்கள். ஒரு வணிக சினிமா சந்தைக்கான இடம் அங்கே இருக்கிறது.

அரசியலாகவும், கலை பண்பாட்டுத் தளங்களிலும் அங்கு இஸ்லாமியர்களின் பங்களிப்பு கணிசமான அளவு இருக்கின்றது. வைக்கம் முஹம்மது பஷீர், ஷிஹாபுதீன் போன்றவர்கள் கலை, பண்பாட்டுத் தளத்தில் நீண்ட நெடிய பங்களிப்பைச் செய்துள்ளார்கள். கலை, பண்பாடு அங்கு பெருந்தாக்கம் செலுத்துகிறது. அரசியல் நுண்ணுணர்வு கொண்டவர்களாக அவர்கள் இருப்பதால் தங்களுடைய பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல், மதிப்பீடுகள் குறித்து இலக்கியமாகவோ, சினிமாவாகவோ பதிவு செய்வதை விருப்பமாகக் கொண்டிருக்கின்றார்கள். பெருவாரியாக அங்கு இருக்கக்கூடிய இந்து, முஸ்லிம், கிறித்தவர்கள் வெளிநாட்டு வாழ்க்கையில் ஒன்றிணைந்து இருப்பதனால் புரிதலும், இணக்கமும் இருப்பதும் ஒரு காரணம்.

எல்லாவற்றையும் கடந்து இஸ்லாமிய சினிமாவுக்கான வணிக வெளி அங்கு இருக்கிறது. கல்வி, வாசிப்புத்தளத்தில் அவர்கள் இருப்பதால் விசாலமான பார்வையும் அங்கு இருக்கிறது. தங்களைக் குறித்த விமர்சனங்கள், முரண்கள் பதிவாவதை அனுமதிக்கும் மனப்பக்குவமும் அங்கு இருப்

பதைப் பார்க்க முடிகிறது. எல்லாருடனும் இணைந்து வாழும் வாழ்வியல் இயல்பாகவே அங்கு சாத்தியமாகியிருக்கிறது.

‘அவங்க வேற, அங்க நாம செல்லக் கூடாது’ என்பன போன்ற பொதுப்புத்தியில் கட்டமைக்கப்பட்ட கற்பிதம் இங்கு இருக் கின்றது. ‘இஸ்லாமிய சினிமா இங்கு அந்நிய மாகப் பார்க்கப்படும், மற்ற மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்’ என்ற உணர்வு தமிழ் நாட்டில் இருக்கிறது. கேரளாவில் அப்படி இல்லை. மம்முட்டி, பஹத் பாசில், துல்கர் சல்மான் போன்ற நடிகர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள், இயக்குநர்கள், முதலீட் டாளர்கள் பெரும்பகுதியினர் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால் அது தனித்துப் பார்க்கப்படுவதில்லை.

தங்களை முஸ்லிம் அடையாளங்களுடன் வெளிப்படுத்திக் கொள்வதில் அவர்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. தமிழ்ச் சினிமாவில் அப்படியான ஓர் அச்சம் இருக்கிறது. தலித்கள் பிற சமூகத்தைச் சார்ந்தவர்கள் இணைந்து வேலை செய்வது புரட்சியாகவும், கலகக் குரலாகவும், சமூக நீதியாகவும், தேவையாகவும் பார்க்கப்படுகிறது. அவர்கள் எளிதில் இணைந்து பணியாற்றுவதில் புறவயமான தடைகளும் இல்லை. ஆனால் பொதுத்தளத்தில் இயங்குகின்ற இரண்டு இஸ்லாமியர்கள் ஒருங்கிணைந்தால் வேறொன்றாகப் பார்க்கப்படுகிறது. சினிமா வாழ்வில் தனிமைப்படுத்தப்படுவோம் என்கிற பய உணர்வு இங்கிருப்பவர்களிடம் இருக்கிறது. பொது அடையாளம் என்பதை நம்புகிறார்கள். பொது அடையாளம் என்பது ஒன்றும் இல்லை.

***எல்லாரும் போல நாங்களும் இரத்தமும், சதையுமான மனிதர்கள்தாம் எங்களுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கின்றது. நாங்கள் வேறல்ல. நாங்கள் ஏற்றிருக்கின்ற மார்க்கம், எங்களுடைய வழிபாடு போன்றவைதான் வித்தியாசப்படுகின்றதே தவிர மற்றபடி வாழ்க்கை இந்த உணர்வு எல்லா மனிதர்களுக்கும் இருப்பதைப் போல்தான் எங்களுக்கும் இருக்கின்றது.***

நீங்கள் என்னதான் பொது அடையாளத் துடன் இருந்தாலும் தனித்துத்தான் பார்க்கப் படுவீர்கள். என்னுடைய பெயர் அபுல் ஹஸன். என் தாயார் பெயர் நல்லமீரா. திமுக குடும்பத்தைச் சார்ந்தவன் என்பதாலும், நல்ல தமிழ்ப் பெயர் வேண்டும் என்பதாலும், நான் சிறுவயதில் முக்கியமான ஆளுமையாகப் பார்த்த திமுகவின் அன்றைய கழகக் கொறடா சம்சுத்தீன் என்ற கா.மு.கதிரவன் பெயரி லுள்ள ஈர்ப்பினாலும் மீரா கதிரவன் எனும் பொது அடையாளத்துடன் தான் இயங்கு கிறேன். ஆனால் நான் பொதுவாகப் பார்க் கப்படுவதில்லை. நான் எல்லாரையும் இங்கு குறிப்பிடவில்லை. ஒரு கலைஞனாக என் னைப் பார்ப்பவர்களும் இங்கு இருக்கின் றார்கள். ஆனால் அதையும் தாண்டிய பார்வை பலருக்கும் இங்கு இருக்கிறது.

அதுபோல் இஸ்லாமியப் படம் எடுக் கும்போது இஸ்லாமிய சமுதாயத்திலிருந்தே எதிர்ப்பு கிளம்பிவிட்டால் தியேட்டருக்குப் படம் வராமல் போய்விட்டால் பெரிய முதலீடு இழப்பாகிவிடும் என்ற அச்சம் பலருக்கும் இருக்கிறது. இங்கு அதற்கான அரசியல் பார்வை போதாமை இருக்கிறது. அதனால்தான் நிறைய இஸ்லாமிய தயாரிப் பாளர்கள் தங்களுடைய வாழ்வைப் பதிவு செய்ய விரும்பவில்லை.

எல்லாவற்றையும் தாண்டி வியாபாரம், அதிகாரத்திற்கு முன்னால் மதம், சாதி எதுவும் இல்லை. வணிக ரீதியான பெரிய நிறுவனமாகவோ, நாங்கள் அணுகிய போது இஸ்லாமியப் படம் என்ற தயக்கத் தையும் தாண்டி முக்கியமான நடிகர்கள் இணைந்திருந்தாலோ எங்களுடன் இணை வதில் சிலர் ஆர்வம் காட்டியிருக் கலாம். தங்கள் அடையாளங்கள், வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற நியாயமான தயக்கம் அவர்களுக்கு இருக்கலாம். ஹபீபி அந்தத் தயக்கங்களை உடைக்கும். மாற்றும். நாமும் இதைச் செய்யலாம், மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற

ஆழமான நம்பிக்கையை, உறுதியை ஹபீபி தரும்.

■ **முஸ்லிம் சமுதாயம் சினிமாவிலிருந்து விலகி இருக்கும்போது ஹபீபியை மக்களிடம் கொண்டு சேர்ப்பது பெரும் சவாலாக இருக்காதா?**

இஸ்லாமியர்கள் இன்று கணிசமாக திரையரங்கிற்கு வரத் தொடங்கியிருக்கின்றார்கள். அவர்களின் கைகளில் அலைப்பேசி இருக்கிறது. அதன் வழியாகவும் பார்க்கிறார்கள். குறிப்பிட்ட சாரார்தான் குறிப்பிட்ட படத்தைப் பார்க்க வேண்டும் என்பது சரியல்ல. இஸ்லாமியர்கள் திரையரங்கிற்கு வருவதற்கு வேறுசில உளவியலான நம்பிக்கை சார்ந்த காரணங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட நேரத்தில் தொழுகை நிறைவேற்ற வேண்டும் என்ற சூழல் அவர்களுக்கு இருக்கின்றது. ஆனால் OTT தளங்கள் இன்று வந்துவிட்ட காலம். ஊடகப் பயன்பாடு அவர்களிடமும் அதிகரித்து விட்டது. அரபு நாடுகளிலும் திரையரங்குகள் வந்து விட்டன. எனவே எல்லைகளின்றி எல்லா இடங்களுக்கும் இப்படம் சென்று சேரும். இஸ்லாமியர்கள் மத்தியிலும் இந்தப் படம் பெரும் வரவேற்பைப் பெறும்.

இஸ்லாம் எவ்வளவு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் முஸ்லிம்களின் உண்மையான வாழ்வியலை பிற மதத்தினரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் இந்தப் படம் எடுக்கப் பட்டிருக்கின்றது. இது இஸ்லாமியர்களுக்கான படம் அல்ல. எல்லாருக்குமான படம்.

■ **ஹபீபி ஒரு தொடர் செயல்பாடாக மாறுமா?**

ஹபீபி தொடர் செயல்பாடாக மாற வேண்டிய தேவை இருக்கிறது. 15 ஆண்டுகளுக்கு முன்பு தலித்கள் குறித்து தமிழ் சினிமா கொண்டிருந்த பார்வையும் இப்போதுள்ள பார்வையும் வேறாக இருக்கிறது. அதற்குக் காரணம் ரஞ்சித், மாரி செல்வராஜ் போன்ற இயக்குநர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான பார்வையை மாற்றியிருக்கின்றார்கள். அவர்களின் வருகையும், படங்களும் பொது மக்கள் மத்தியிலும் ஓர் அசைவை உருவாக்கியிருக்கிறது.

பழங்குடியினர், தலித்கள், விழிம்புநிலை மக்களைக் காட்டிலும் இஸ்லாமியர்கள் இன்று வெறுப்பரசியலில் துண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். காஷ்மீர் ஃபைல்ஸ், கேரள ஸ்டோரி போன்ற இஸ்லாமிய வெறுப்பு சினிமாக்களை உருவாக்கி திட்டமிட்ட வெறுப்பை விதைப்பதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றது. இங்கிருக்கும் சமய நல்லிணக்கம், ஒருமைப்பாடு தங்கள் அரசியல் ஆதாயத்திற்கு இடையூறாக இருக்கும் என்று நம்பக்கூடியவர்கள் இஸ்லாமியர்கள் குறித்த ஒவ்வாமையையும், வெறுப்பையும் கட்டமைக்க காட்சி ஊடகங்களை ஆயுதமாக எடுத்திருக்கின்றார்கள்.

சச்சார் அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல முஸ்லிம்கள் பொருளாதார ரீதியாக தலித்களை விடவும் பின்தங்கி இருக்கிறார்கள். எண்ணிக்கையில் மட்டுமின்றி அதிகாரத்திலும் முஸ்லிம்கள் குறைவாகவே உள்ளனர்.

முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்று கடந்த 15 ஆண்டுகளாக சினிமாவின் வழியாகச் சொல்லி வந்தவர்கள் அதை வெறுப்பரசியலாகக் கூர்மைப்படுத்தியிருக்கின்றார்கள். இஸ்லாமியர்கள் வாழ்வு தவறாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது என்று போராடுவதால் மட்டுமே மாற்றம் உருவாகி விடாது. அது சிறிய கவன ஈர்ப்பை உருவாக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் எதன் வழியாக உங்களை அவதூறு செய்கின்றார்களோ, ஒடுக்குகின்றார்களோ, அடையாளங்களை முற்றிலுமாக அழிக்க நினைக்கின்றார்களோ அதன் வழியாக பதிலளிப்பதுதான் முக்கியமான நகர்வாக இருக்கும்.

ஒரு காட்டை வெட்டி தடத்தை உருவாக்குவதைப் போல தமிழில் இஸ்லாமிய சினிமா என்ற புதிய தடத்தை உருவாக்கியிருக்கின்றோம். எல்லாப் படங்களுக்கும் ஒரு ரெபரென்ஸ் படம் இருக்கும். ஆனால் தமிழ் திரையுலகில் ஹபீபிக்கான ரெபரென்ஸ்

எதுவும் இல்லை. ஹபீபிதான் இனிவரும் படங்களுக்கு ரெபரென்ஸாக இருக்கும். இந்தப் பாதையில் பல்வேறு தடைகள், சிரமங்களைத் தாண்டித்தான் ஒரு தொடக்கப் புள்ளியை வைத்திருக்கின்றோம். இந்தத் தொடக்கப்புள்ளியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்று தமிழ் சினிமாவில் மட்டு மின்றி இந்திய சினிமாவில் இஸ்லாமிய வெறுப்பு சினிமாவுக்கு எதிராகக் களமாடக் கூடிய இஸ்லாமிய வாழ்வியலை இயல் போடு சொல்லக் கூடிய உண்மையை எடுத் துரைக்கும் படங்கள் வரவேண்டிய தேவை இருக்கிறது. அது ஒரு ஹபீபியினால் மட்டுமே சாத்தியமில்லை என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். கூட்டியக்கமாகச் செயல்பட வேண்டிய தேவை இருக்கிறது.

இஸ்லாமிய வெறுப்பை உருவாக்கு பவர்களின் படைப்புகளில் வடிவ நேர்த்தி இல்லை என்றாலும், கருத்தியல் செறிவு இல்லையென்றாலும் கூட அவர்களுடன் நின்று அதை மக்களிடம் கொண்டு சேர்க்க முயல்கிறார்கள். ஹபீபி போன்ற படங்களுக்கு ஜனநாயக சக்திகள், முற் போக்கு களச் செயல்பாட்டாளர்கள் ஒருங் கிணைந்து நின்று தொடர்ந்து தலித் சினிமாக்கள் மாற்றத்தை உருவாக்கியதைப் போல இஸ்லாமிய சினிமாவைக் கொண்டு வரத் தேவை இருக்கிறது.

வெறும் கதைகளினால் மட்டுமே இது நிகழ்ந்துவிடுவதில்லை. இதற்குப் பின் பெரும் பொருளாதாரத் தேவையும் இருக்கிறது. இப்போது கூட விழித்துக் கொள்ளவில்லை எனில் கடந்த 15 ஆண்டுகளில் எப்படி இஸ்லாமியர்கள் தீவிரவாதிகள் எனக் காட்சிப்படுத்தப்பட்டு குழந்தைகள் உள்ளிட்ட பொதுப்புத்தியில் கட்டமைக்கப்பட்டதோ அதுபோன்றே எதிர்கால வெறுப்பரசியலில் அடுத்த தலைமுறையும் வீழ்ந்துவிடும். எனவே இது தொடர் செயல்பாடாக மாற வேண்டிய தேவை இருக்கிறது. ஹபீபி அதைச் சாத்தியபடுத்தும் என்ற நம்பிக்கை இருக்கிறது.


www.samarasam.net
சமரசம்
மாதம் இருமுறை இதழ்
₹25

46 ஆண்டுகளைக் கடந்து
இதழியல் பயணத்தில்
முத்திரை பதித்த முன்னோடி இதழ்

ஆண்டுச் சந்தா
ரூ. 550
மட்டுமே

விருப்பு வெறுப்பற்ற
நேர்கொண்ட பார்வை



தேன் தமிழில் தீன் மணக்கும்
திங்களிருமுறை இதழ்


எல்லாருக்குமான இதழ்
எல்லாம் நிறைந்த இதழ்



வங்கி விவரம் :
Creative Communication Chennai
A/c No. 30705346015
State Bank of India, Jamalia Branch,
IFS Code - SBIN0014623
Gpay : 9566153142

தொடர்புக்கு :
சமரசம்
138, IFT லேன், பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை 12.
• 044-2662 0091 • 95661 53142
• samarasam12@gmail.com
• www.samarasam.net

# பால்யத்தை மீட்டெடுக்கும் குரல்



**- வி.எஸ்.முஹம்மத் அமீன்**

திருமணங்கள்
பெருநாள்
கந்தூரியென
எங்கும் ஒலித்த
நாகூர் ஹனீஃபாவின்
கம்பீரக் குரலை
இப்போது கேட்க நேரிடும் பொழுதில்
குழந்தைப் பருவம்
மீண்டெழுகிறது

‘அதிகாலை நேரம் சுபுஹுக்குப் பின்னே
அண்ணல் நபி வரும்போது..’ பாடல்
சாயாக் கடையிலிருந்து
புத்தம் புதிய காலைப் பொழுதைக்
கொண்டுவந்து தரும்

‘வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே’ என
எல்லாக் கல்யாணங்களிலும்
மணமக்களை ஹனீஃபா
வாழ்த்திக் கொண்டிருப்பார்

கந்தூரியின் குதூகலம்
‘தீன்குலப் பெண்ணே’ தொடங்கி
‘பாலைவனம் தாண்டிப் போகலாமே நாம்’ எனத்
தொடரும் கீதங்கள்
வீதியெங்கும் நிறைத்திருக்கும்

‘ஹஜ்ஜுப் பெருநாள் வந்த சரித்திரம்
கேளுங்கள்’ என்று பெருநாளை
அலங்கரிக்கும் குரல்
‘காணக்கண் கோடி வேண்டும் கஅபாவை
ஹஜ்ஜுக் காட்சிக்கிணையாக
உலகில் எதுவும் இல்லை’ என்று
திவ்ய தலம் காணலுக்கான
ஏக்கம் பிறப்பிக்கச் செய்யும்

வெளிநாட்டிலிருந்து வீடுதிரும்பும் மாமா
பெட்டி உடைத்து புது டேப்ரிக்கார்டரில்
‘அருள் மணக்குது அறம் மணக்குது’
என்ற சுகந்தத்தைப் பரப்பிவிடுவார்

தேர்தல் காலம் வந்தாலே
இந்த உதயசூரியன்
ஓடி வந்து விடுவான்

வெளிநாட்டிலிருந்து
உம்ரா பயணத்திற்காக
தாயிஃப் சென்ற பொழுதில்
‘தாயிஃப் நகரத்து வீதியிலே
எங்கள் தாஹா ரசூல் நபி நடக்கையிலே’
என்ற குரல் இதயத்திலிருந்து
பீறிட்டெழுந்து உயிர் சிலிர்க்க வைக்கும்

மதீனாவைச் சென்றடைந்ததும்
‘புஷ்பங்களின் மகரந்தமாம்
மதீனப் புழுதியில் நான் உருள வேண்டும்
புரளவேண்டுமென்று’ கேட்டுப் பழகிய குரல்
செருப்பு கழட்டி மண்மிதிக்கச் சொல்லி
பேரார்வத்தை ஏற்படுத்தும்

இறைவனிடம் கையேந்தச் சொன்ன குரல்
‘அல்லா ஒருவனே துணை நமக்கு’ என்று
ஏகத்துவம் முழங்கிய குரல்
‘உங்கள் திருமுகம் எப்படி இருக்குமோ
யா ரசூலல்லாஹ்’ என நபி நேசம் கூட்டிய குரல்
‘மௌத்தையே நீ மறந்து இங்கு வாழலாகுமோ’
என வாழ்வின் நிலையாமை சொன்ன குரல்
‘நீங்கள் கைக்கூலி வாங்குவது முறைதானா?
மார்க்க நெறிதானா?’ என்று கண்டித்த குரல்

‘ஐந்து கடமைகளின் தத்துவங்கள்’ சொன்ன குரல்
‘பெரியார் பிலாலின் தியாக வாழ்க்கை’ கூறிய குரல்
‘ஃபாத்திமா வாழ்ந்த முறை’ கற்பித்த குரல்
‘தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு’ எனத்
தூதனுப்பி
வெள்ளிப் பனிமலை உருகுதுபோல்
உள்ளம் உருக வைத்து நம் வாழ்வு முழுவதும்
கலந்து நிரம்பிய நூற்றாண்டின் குரலை
எப்படி மீட்டெடுக்கப் போகிறோம்?

- நாகூர் இ.எம்.ஹனீஃபா
நூற்றாண்டு மலரில் இடம்பெற்ற கவிதை

# இந்த உலகத்திற்கு சையது இப்ராஹீம்கள் மிகவும் தேவை!

**– பேராசிரியர் T.மார்க்ஸ்**



முனைவர் B.சையது இப்ராஹீம் இனி இல்லை! (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் - நிச்சயமாக நாம் அல்லாஹ்விடமிருந்து வந்தவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்கிறோம்)

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் Schools of Life Sciences துறையின் Centre for Bio informatics இணைப் பேராசிரியராகப் பணியாற்றிய முனைவர் B.சையது இப்ராஹீமின் திடீர் இறப்பைக் குறித்து ஆழ்ந்த வேதனையுடனும் அதிர்ச்சியுடனும் நான் இரங்கல் தெரிவிக்கின்றேன். அவரது இறப்பு கல்வி, சமூக, ஆன்மிகத் தளங்களில் ஆழமான வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

பேராசிரியர் சையது இப்ராஹீமை தனித்துவமாக உயர்த்திய அம்சம் என்ன வென்றால் துறை எல்லைகளைத் தாண்டி சிந்திக்கக் கூடிய அவரது அபூர்வமான திறமை யாகும். Bioinformatics அவரது முறையான கல்வித் துறையாக இருந்தாலும் அறிவியல், மதம், இலக்கியம், சமூக நீதியை இணைக்கும் புள்ளிகளை ஆராயும் ஆழ்ந்த அறிவுத் தாகம் அவருக்கு இருந்தது. இஸ்லாம், இலக்கியம், இந்திய இலக்கியத்தில் முஸ்லிம் குரல்கள், இஸ்லாமியப் பெண்ணியம் போன்ற முக்கியமான தளங்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர் அவர்.

அறிவுப் பரிமாற்றத்திற்கான மேடைகளை உருவாக்குவதிலும் அவரது பார்வை விரிந்திருந்தது. இஸ்லாமிய சிந்தனைக்கான மன்றம் (Islamic Forum for Thought) உடன் இணைந்து கல்வி முயற்சிகளை அமைப்பதில் அவர் தீவிரமாக ஈடுபட்டார். அஞ்சுமன் நூற்றாண்டு விழாவின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவராகப் பணியாற்றி, மதங்களுக்கிடையேயான உரையாடலையும் பண்பாட்டுப் புரிதலையும் வளர்ப்பதற் கான அவரது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.

பேராசிரியர் சையது இப்ராஹீமின் அறிவுப் பயணம், அவரது ஆழ்ந்த மனித நேய அக்கறைகளிலிருந்து பிரிக்க முடியாததாக இருந்தது. அறிவியலை, சமூக இயக் கங்களுடன் இணைக்க வேண்டிய அவசியத்தை அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். அறிவியல் முன்னேற்றம் சமூக நீதிக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடு. மதச் சகிப்பின்மை, உலகளாவிய ஆதிக்கக் கோரிக்கைகள் குறிப்பாக ஃபலஸ்தீனின் நிலை, ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை, பொருளாதார ரீதியாக பின்தங்கிய சமூகங்களின் துயரங்கள் அவரது சிந்தனையின் மையமாக இருந்தன.

**பாரம்பரிய ஞானத்தைக் கேள்விக்குள்ளாக்கி, இரக்கம், உண்மை என்ற கோட்பாடுகளின் வழிகாட்டுதலுடன் அநீதியை எதிர்த்தவர். அவரது வகுப்பறை வெறும் அறிவியல் கற்பிக்கும் இடமல்ல; உலகை விமர்சன நோக்கில் சிந்திக்கவும், அதில் தங்களின் பொறுப்புகளை உணரவும் மாணவர்கள் கற்றுக்கொண்ட ஒரு மேடையாக இருந்தது.**

மனித வேதனையின் சுமையை உண்மையான இரக்கத்துடன் சுமந்த ஒருவராகவே நான் அவரை நினைவு கூர்கிறேன். மாறுபட்ட மனித சூழ்நிலைகள் குறித்த அவரது கவலையும், அநீதிக்கு எதிரான அவரது கோபமும், வெறும் கோட்பாட்டு நிலைப்பாடுகள் அல்ல; அவை அவரது செயல்பாடுகளுக்கும் கற்பித்தலுக்கும் தூண்டுகோலாக இருந்த ஆழமான உணர்வுகளாகும்.

பேராசிரியர் சையத் இப்ராஹீமை அறிந்தவர்கள், அவரை எளிமையின் உருவமாக விவரிக்கிறார்கள். கல்விச் சாதனைகளும் அறிவாற்றலும் இருந்தபோதிலும், அவர் எப்போதும் எளிமையானவராகவும் எளிதில் அணுகக் கூடியவரகவும் இருந்தார். ஒரு பக்தியுள்ள முஸ்லிமாக, அவரது நம்பிக்கை அவரது தனிப்பட்ட நடத்தை மட்டுமல்லாமல், தொழில்முறை ஒழுக்கத்தையும் மனிதகுலத்திற்குச் சேவை செய்யும் அவரது அர்ப்பணிப்பையும் வடிவமைத்தது.

மென்மையாகப் பேசும் தன்மை கொண்டிருந்தாலும், அவர் ஒரு தீவிர சிந்தனையாளரின் தைரியத்தை உடையவராக இருந்தார். பாரம்பரிய ஞானத்தைக் கேள்விக்குள்ளாக்கி, இரக்கம், உண்மை என்ற கோட்பாடுகளின் வழிகாட்டுதலுடன் அநீதியை எதிர்த்தவர். அவரது வகுப்பறை வெறும் அறிவியல் கற்பிக்கும் இடமல்ல; உலகை விமர்சன நோக்கில் சிந்திக்கவும், அதில் தங்களின் பொறுப்புகளை உணரவும் மாணவர்கள் கற்றுக்கொண்ட ஒரு மேடையாக இருந்தது.

அவரை நண்பராக அழைக்கும் பாக்கியம் பெற்றவர்களுக்கு, பேராசிரியர் சையத் இப்ராஹீம் ஞானம், ஊக்கம், ஒழுக்க நெறிமுறைகள் ஆகியவற்றிற்கான ஆதாரமாக இருந்தார். அவரது நட்பு தொழில்முறை எல்லைகளைத் தாண்டியது; அவர் நம்பிக்கையாளராக, வழிகாட்டியாக, ஆலோசகராக இருந்து, சந்தித்த ஒவ்வொருவரின் வாழ்வையும் செழுமைப்படுத்தினார். அவரது இறப்பு ஒரு சிறந்த அறிவாளியின் இழப்பாக மட்டுமல்ல, அமைதி, மரியாதை, மகிழ்ச்சியுடன் அனைத்து மனிதர்களும் வாழக்கூடிய உலகைக் கனவு கண்ட ஓர் அழகிய ஆத்மாவின் இழப்பாகும்.

முனைவர் சையது இப்ராஹீம், அறிவியல் சமூகத்திற்குத் தொடர்ந்து பயனளிக்கும் அவரது ஆய்வுப் பங்களிப்புகள், அவர் வழிகாட்டி ஊக்கமளித்த மாணவர்கள், நம்பிக்கை, சமூகத்தைப் பற்றி அவர் தொடங்கிய உரையாடல்கள், நீதி, மனித மரியாதைக்கான அவரது நிலையான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் ஒரு செழுமையான பாரம்பரியத்தை விட்டுச் சென்றுள்ளார்.

உண்மையான கல்வியாளர் என்பது ஆய்வகங்களுக்கும் ஆய்வு இதழ்களுக்கும் மட்டுப்பட்டவரல்ல; உலகத்துடனும் அதன் வேதனையுடனும் நாம் எவ்வாறு தொடர்பு கொள்கிறோம் என்பதிலேயே அது விரிகிறது என்பதை அவரது வாழ்க்கை நமக்கு நினைவூட்டுகிறது.

அவரது ஆத்மா இறைவனின் திருப்பாதங்களில் நித்திய அமைதியடையட்டும். இந்தப் பேரிழப்பைத் தாங்கும் வலிமையை அவரது குடும்பத்தாருக்கும், சக ஊழியர்களுக்கும், அவரை நேசித்த அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக. இத்தகைய நல்ல ஆத்மாக்களுக்கு இந்த உலகம் தேவையில்லாமல் இருந்தாலும், இந்த உலகத்திற்கு இத்தகைய ஆத்மாக்கள் மிகவும் அவசியம்.

# இதர மத ஆளுமைகளின் பார்வையில் நபி(ஸல்) அவர்கள்

## உஸ்வத்துன் நபி சர்வதேச கல்வியியல் மாநாட்டு ஆய்வு




**2025** செப்டம்பர் 17ஆம் தேதி ஹைதராபாத் மௌலானா ஆசாத் நேஷனல் உருது பல்கலைக்கழக வளாகத்தில் அரபித் துறை, SSF இணைந்து உஸ்வத்துன் நபி சர்வதேச கல்வியியல் மாநாட்டை நடத்தியது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள், ஆய்வாளர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

நபி(ஸல்) அவர்கள் மீதான நேசம், கண்ணியம், வரலாறு, இலக்கியம், கலாச்சாரம், சமுதாயம் போன்ற பல்வேறு கோணங்களில் ஆய்வுக் கட்டுரைகள் அமைந்திருந்தன. அறிஞர்கள் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரைகளைத் தொடர்ந்து விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன.

இந்த மாநாட்டில் கேரளா சாந்தபுரம் அல் ஜாமியா அல் இஸ்லாமியா கல்லூரியில் பயின்று வரும் தமிழ்நாடு விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த இந்திய மாணவியர் அமைப்பு(GIO) மாணவி N.தௌஃபீகா ரஷ்மி கலந்து கொண்டு 'இதர மத ஆளுமை களின் பார்வையில் நபி(ஸல்) அவர்கள்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கினார்.

முஸ்லிமல்லாத தமிழ் எழுத்தாளர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை எவ்வாறு மரியாதையுடனும், ஆழமாகவும் பார்த்துள்ளனர் என்பதை தௌஃபீகா விளக்கியபோது பார்வையாளர்கள் வியந்து பாராட்டினர். உலக அளவில் ஆளுமைகள் நபி(ஸல்) அவர்களைப் பார்த்த பார்வையிலிருந்து இன்னும் அடர்த்தியாக, விரிவாக தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், தலைவர்கள் பார்த்த பார்வை தமிழ் நிலத்தின் சிறப்பம்ச மாகும். மதம், மொழி எல்லைகளைத் தாண்டி மத நல்லிணக்கத்தை வளர்த்ததில் நபி(ஸல்) அவர்களின் பங்களிப்பை தமிழ் ஆளுமைகள் எடுத்துரைத்த விதத்தை தௌஃபீகா விளக்கினார்.

### ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நூல்கள்

முத்தையா எழுதிய 'மாணவர்களுக்கு நபிகள் நாயகம் வரலாறு' என்ற நூல் ஆய் வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குழந்தை களுக்கு நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையை அறிமுகப்படுத்தும் எளிய நூல் இது.

பேராசிரியர் அ. மார்க்ஸ் எழுதிய 'நான் புரிந்து கொண்ட நபிகள் நாயகம்(ஸல்)' நபிகளாரின் வாழ்வு, வரலாறு, நபி(ஸல்) ஏற்படுத்திய புரட்சிகர மாற்றங்கள், சமூக நீதிக்கான நபி(ஸல்) அவர்களின் போராட்ட வாழ்வு என மிக விரிவாக புதிய கோணத்தில் ஆய்வு செய்யப்பட்ட நூல் இது.

தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 1973ஆம் ஆண்டு கும்ப கோணத்தில் நடைபெற்ற அகில இந்திய மீலாது விழாவில் ஆற்றிய விழாப் பேருரை நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. நபி(ஸல்)

அவர்களின் ஒழுக்க வாழ்வை, சமூக மாற்றம் தந்த நிகழ்வுகளை விரிவாகப் பேசும் நூல் அது.

தமிழ் கிளாசிக்கல் இலக்கியத்தில் சண்முகனார் எழுதிய நபிகள் நாதர் பிள்ளைத் தமிழ் கோவை (பிள்ளைத் தமிழ் வகை) நூலில் எடுத்தாளப்பட்ட 'ஒன்றே தேவன்! குலமொன்றாம்! உண்மை உரைத்த திருத்தூதே!' எனும் கருப்பொருளும் இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டது.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் 1989ஆம் ஆண்டு வேலூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்திய மீலாது நிகழ்வில் ஆற்றிய உரையை இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் (IFT) 'என்னைக் கவர்ந்த பெருமனார்(ஸல்)' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. அந்த நூலில் நபி(ஸல்) அவர்கள் போதித்த வாழ்வியல் நெறி, அவர்களின் ஆளுமைப் பண்புகள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நபிகள் நாயகம் குறித்த இதர மத ஆளுமைகளின் பார்வை என்ன என்பதை மானுட வசந்தம் தொலைக்காட்சித் தொடராகப் பதிவு செய்து, சமரசம் இதழில் தொடராக வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்று, 'இவர்கள் பார்வையில் நபிகள் நாயகம்(ஸல்)' என்ற தலைப்பில் இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்(IFT) வெளியிட்ட நூலும் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டது.

சமரசம் பொறுப்பாசிரியர் வி.எஸ். முஹம்மத் அமீன் தொகுத்த இந்த நூலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், பேராசிரியர் அ.மார்க்ஸ், கவிஞர் ஈரோடு தமிழன்பன், தமிழருவி மணியன், பீட்டர் அல்போன்ஸ், லேனா தமிழ்வாணன், முனைவர் சிலம்பொலி செல்லப்பனார், திருச்சி சிவா MP, கம்பம் செல்வேந்திரன் ஆகிய ஆளுமைகள் நபி(ஸல்) அவர்களைக் குறித்துச் சொன்ன பிரமிக்க வைக்கும் விசாலமான பார்வை மிக விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நூல் இந்த ஆய்விற்கு மிகப் பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டது.

நபி(ஸல்) அவர்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் தமிழ்ச் சமூகத்தில் எவ்வளவு ஆழமாக பதிந்துள்ளன என்பதையும், மத எல்லைகளைத் தாண்டி மக்கள் நபி(ஸல்) அவர்களைப் போற்றி மதிப்பது ஏன் என்பதையும் இந்த ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன.

### ஆய்வுத் தலைப்புகள்:

### 1.சமூகச் சீர்திருத்தம் செய்த நபி(ஸல்)


தமிழ் இலக்கியங்களில் நபி(ஸல்) அவர்களை சமூக மாற்றங்களுக்கான முன்னோடியாகப் பதிவு செய்துள்ளனர். சாதி, மதப் பாகுபாடுகளை எதிர்த்து சமத்துவத்தை வலியுறுத்தும் நபிகளின் நடவடிக்கைகள், சமூக நீதியை ஊக்குவித்த நிகழ்வுகள் எழுத்தாளர்களால் வர்ணிக்கப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் ஆன்மிகம் மட்டுமின்றி, மக்கள் நலனுக்காகச் செயல்பட்ட வரலாறு, தமிழ்ச் சமூகத்தில் உள்ள நீதி, சமத்துவத்துக்கான போராட்டங்களை எடுத்துரைத்து உள்ளது.


### 2. அமைதியை நிலைநாட்டிய நபி(ஸல்)

நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை பரஸ்பர மத அமைதிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. பகையை அறுத்து, மக்களிடையே நல்லிணக்கமும், அமைதியையும் ஏற்படுத்தும் நபிகளாரின் செயல்கள் தமிழ் எழுத்தாளர்களால் சித்தாந்தமாகவும் நிகழ்ச்சியாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. போராடும் சமூகங்களின் ஒற்றுமை, மற்ற மதங்கள், மக்கள் மதிப்புக்கு உரிய மரியாதை, நபி(ஸல்) அவர்களின் நெறிமுறைகளை வெளிப்படுத்துகிறது.


### 3. நெறி போற்றும் நபி(ஸல்)

நபி(ஸல்) அவர்களின் எளிமை, வீரம், நேர்மை மனித குலத்திற்கு முன்மாதிரியாய் திகழ்கிறது. வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளும் நபிகளாரின் ஆற்றல், ஒழுக்கம், சமநிலை ஆகியன எழுத்தாளர்களால்












முன்மாதிரியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை அனை வருக்கும் நம்பிக்கையையும், உத்வேகத்தையும் அளிக்கும் அழகிய வாழ்வாக அமைந்துள்ளது.

## 4. நபி(ஸல்) அவர்களின் தலைமைப்பண்பு

நபி(ஸல்) அவர்களின் பார்வை, நெருக்கடி காலத்தில் அவர்களின் செயல்பாடுகள், விவேகமான முடிவுகள் அவர்களைத் தலை வராகவும் முன்னோடியாகவும் காட்டு கின்றன. தமிழ் ஆளுமைகள் நபிகளாரின் நியாயம், சமூக நலன், தர்மத்தின் மீது நிலைத்திருக்கக் கூடிய செயல்கள் என்பதைக் குறிப்பிட்டுள்ளனர். நபி(ஸல்) அவர்கள் மனித குலத்திற்கு நேர்மையான வழிகாட்டியாக விளங்குகிறார்கள்.

### தமிழ்ச் சமூகத்தில் தாக்கம்

முஸ்லிம் அல்லாத தமிழ் எழுத்தாளர்கள் நபி(ஸல்) அவரகளைக் குறித்து கூறியவைகள் தமிழ்ச் சமூகத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

### சமூகச் சீர்திருத்தம்

சாதி, சமூகப் பாகுபாடுகளை எதிர்த்து சமத்துவத்தை வலியுறுத்தும் நபி(ஸல்) அவர் களின் போதனைகள் தமிழ்ச் சமூகத்தில் சமூக நீதி, ஒற்றுமையைக்கு வழிகாட்டி உள்ளன.

### வேற்றுமையில் ஒற்றுமை

பல மதத்தினரும் பகை இல்லாமல், ஒருவரையொருவர் மதிப்புடன் அணுகும் வழிமுறைகள் முன்வைக்கப்பட்டு, மத நல்லிணக்கத்தையும், அமைதியையும் வளர்த் துள்ளது.

### ஊக்கம் தரும் முன்மாதிரி

நபி(ஸல்) அவர்களின் பண்புகளான எளிமை, பொறுமை, நீதி, வீரம் தமிழ் வாசகர்களுக்கு நம்பிக்கை, ஊக்கத்தை வழங்குகின்றன.

### விழிப்பு உணர்வு

தமிழ் இலக்கியங்களில் புதுமையான வகைகளில் நபி(ஸல்) அவர்களின் வாழ்வி யலை எடுத்துரைத்து வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி, சமூக விழிப்பு உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

### தாக்கம்

இந்த வாழ்வியலை வாசிப்பதன் மூலம் மதங்களைக் குறித்த தவறான கற்பிதங்கள் விலகுவதற்கும், ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்கும் வழிவகுத்துள்ளது. இஸ்லாம் குறித்த விரிவான புரிதலையும் இது ஏற்படுத்தியுள்ளது.

## முடிவுரை

முஸ்லிம் அல்லாத தமிழ் ஆளுமை களின் பார்வையில் நபி முஹம்மது(ஸல்) அவர்களைக் குறித்த விசாலமான பார் வையை வெளிப்படுத்துகின்றன. நபி(ஸல்) அவர்கள் அன்றைய அரபு நாட்டிற்கு மட்டுமோ, அன்றைய காலத்திற்கு மட்டுமோ, குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டுமோ அல்லாமல் மனித குலம் முழுவதற்கும் வழி காட்டியாகத் திகழ்ந்துள்ளார்கள் என்பதற்கான சான்றாக தமிழ் ஆளுமைகளின் கருத்துகள் திகழ்கின்றன.

சமூகச் சீர்திருத்தம், மனித குல அமைதி, ஒழுக்க விழுமங்கள், தலைமைப் பண்பு போன்ற பல்வேறு கோணங்களில் நபி(ஸல்) அவர்களின் வாழ்வை அறிஞர்கள் விரிவாகப் பதிவு செய்துள்ளனர். இது சமய நல்லிணக்கத்திற்கும், மதங்களைக் குறித்த புரிதல்களுக்கும் பெரிதும் துணை நிற்கும்.

# அக்கறைப் பச்சை 32

• ஜரினா ஜமால்

சாலிஹா குஜராத் நிகழ்வைச் சொல்லத் தொடங்கினாள். 'பெற்றோர்களின் கண்முன்னே பிள்ளைகள் வன்புணர்வு செய்யப்பட்டார்கள். கர்ப்பிணியின் வயிற்றைக் கிழித்து கருவை வெளியே எடுத்து வாளின் முனையில் குத்தி தரையில் அடித்த கொடுமையை எங்காவது கேள்விப்பட்டு இருக்கிறோமா?'

ஹஸினா சப்தமாகக் கேட்டாள்.

'என்னது கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்தார்களா?'

'ஆமாம்' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தாள் சாலிஹா.

'பில்கீஸ்பானு ரான்திக்பூர் கிராமத்தில் வாழ்ந்து வந்த தன்னுடைய பெற்றோரைச் சந்திக்க வந்திருந்தார். இந்தக் கிராமம் கோத்ராவுக்குப் பக்கத்தில் இருந்தது. பில்கீஸ் 3 வயது குழந்தைக்குத் தாயாகவும், 5 மாத கர்ப்பத்தைச் சுமந்தவராகவும் இருந்தார். சமையலறையில் மதிய உணவை சமைத்துக் கொண்டிருந்த பில்கீஸை அவளுடைய அத்தையும் அவருடைய குழந்தைகளும் ஓடி வந்து, மற்ற முஸ்லிம்கள் வீடுகளும், தங்களுடைய வீடும் தீ வைத்துக் கொளுத்தப்படுவதாகவும், உடனடியாக இந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கூறினார்கள்.

தன்னுடைய மூன்று வயது மகள், தன் தாய், கர்ப்பிணியான உறவுப்பெண், அவளுடைய உடன்பிறப்பு, அவருடைய மகன்கள், மகள்கள் வயது வந்த ஆண்கள் இருவர் என மொத்தம் 17 பேர் குழுவில் பில்கீஸ் பானுவும் இருந்தார். பாதுகாப்புக் கோரி கிராம கவுன்சில் தலைவரிடம் சென்றுள்ளனர். ஆனால் முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்தால் அவரையும் கொலை செய்துவிடுவதாக அந்தக் கும்பல் மிரட்டியதால் அந்த இடத்தை விட்டுச் சென்றனர்.

மார்ச் மாதம் 3ஆம் தேதி அங்கு வந்து சேர்ந்த கொடூரர்கள் அவர்களை வாளாலும், தடியாலும் தாக்கினார்கள். 3 வயது மகள் மதவெறியர்களால் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டாள். அவளுடைய ஆடைகளைக் கிழித்தெறிந்தனர். அதன் பிறகு அந்தக் கொலைவெறிக் கும்பலால் கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டாள்.

பில்கிஸ் பானுவை வன்புணர்ந்தோரும் அந்தக் குழுவில் இருந்தோரைத் தாக்கியோரும், சிறு வயதில் அவர்களோடு பார்த்துப் பார்த்து வளர்ந்த கிராமத்திலுள்ள அண்டை வீட்டுக்காரர்கள்தான். தான் ஐந்து மாத கர்ப்பிணி என்றும் இரக்கம் காட்டுமாறும் பில்கீஸ் பானு அவர்களிடம் மன்றாடியும் அவர்கள் கேட்கவில்லை. அவர்களுடன் வந்த பெண் இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் குழந்தை பெற்றிருந்தார். அவரையும் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கிக் கொன்றார்கள். இரண்டு நாள் பச்சிளம் குழந்தையும் கொல்லப்பட்டது. அவள் குடும்ப உறுப்பினர்கள் 14 பேரும் அவள் கண் முன்னால் கொலை செய்யப்பட்டார்கள்.

பில்கிஸ் பானு சுயநினைவிழந்து போனதால் இறந்துவிட்டதாக நினைத்து வன்னெஞ்சர்கள் விட்டுப் போயினர். எனவே அவர் பிழைத்துக்கொண்டார். ஏழு வயதும், நான்கு வயதுமான இரு சிறுவர்கள் மட்டும் இந்தப்படுகொலையில் இருந்து தப்பித்தவர்கள்'

சொல்லச் சொல்ல கட்டுப்படுத்த முடியாமல் அழுகை பொங்கி பிரவாக மெடுத்தது சாலிஹாவிற்கு.

கேட்டுக் கொண்டிருந்த ஹஸினாவும், சாதிக்காவும் முகத்தை மூடி அழுதனர். கொழுக்கட்டை குழம்பின் வாசனை வீட்டை நிறைத்தது. கொதிக்கும் உருண் டைகளுக்கு அருகில் பிடித்து வைத்த மற்ற உருண்டைகளைக் குழம்பில் போடுமாறு ஏவினாள் சாலிஹா.

‘சொல்லுங்க மாமி பில்கீஸ் பானு என்ன ஆனா?’ என்று கேட்டாள் சாதிக்கா

‘இந்தக் கொடூரத்திலிருந்து தப்பித்த பில்கீஸ் இதை இப்படியே விட்டு விட வில்லை. பல ஆண்டுகளாக நீதி கேட்டுப் போராடி வருகிறாள். முதன் முதலில் அவள் கேஸ் போட்ட போது அவர்களே அதைத் திரும்ப வாங்கும்படி மிரட்டி னார்கள். தொடர்ந்து பில்கீஸ் போராடி னாள். இந்த வழக்கு குஜராத்திலிருந்து மஹாராஷ்டிரா நீதிமன்றத்திற்கு மாற்றப் பட்டது. வழக்கு விசாரணைக்கு வந்த போது பல சிக்கலுக்கு ஆளானார்கள். இறுதியாக பில்கீஸ் வென்றாள். அநியக் காரர்கள் அனைவருக்கும் மரண தண்டனை அளிக்குமாறு வாதாடினாள். ஆனால் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனைதான் கிடைத்தது’

‘அல்லாஹ்வே! நெஞ்செல்லாம் பட படங்குதே!’ ஹஸினா அழும் குரலில் கூறினாள்.

‘இது ஒரு நிகழ்வு மட்டுமல்ல.. இதுபோன்று பல பெண்கள் வன்புணர்வு செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டார்கள். வேதனை யோடும், அவமானத்தோடும் அந்தப் பெண் பிள்ளைகளின் தந்தைகள், தங்கள் மகள்கள் வன்புணர்வுக்கு ஆளானதைப் பத்தி வாக்குமூலம் கொடுத்தார்கள். ஸூஃபியாபானு என்ற 22 வயதுப் பெண், அவள் தந்தை கண்ணெதிரில் வன்புணர்வுக்கு ஆளாகி தீ வைத்து எரித்துக் கொல்லப் பட்டாள்.

அவருடைய தந்தை தன் மகளைக் காப்பாற்ற முயற்சி செய்திருக்கிறார். அவரை இறுக்கமாகப் பிடித்துக் கொண்ட கயவர்கள், அவருடைய தாடியை வெட்டி வீசியுள்ளார்கள். அவரது குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டார்கள்.

‘அக்கா! நீங்க சும்மா இருக்க மாட் டீங்களா? ஒன்னுஒன்னா கேக்குறீங்களே! எனக்கு என்னவோ பண்ணுது’ ஹஸினா பதறினாள்.

‘மாமி! போலீஸோ, கவர்மெண்டோ ஏதும் செய்யலியா? அவர்கள் போலீஸ் ஸ்டேசன் போயிருக்கலாமே?’ என்றாள் சாதிக்கா.

‘போமா நீ வேற! திட்டமிட்டு செஞ் சதே அரசாங்கம்தான். நரோடா பாட்டியா போன்ற பகுதியில் திட்டமிட்டு, வெட் டப்பட்டு, குத்தப்பட்டு, வன்புணர்வு செய்யப்பட்டு 150 பேர் கொல்லப் பட்டுள்ளார்கள். அரசு எத்தனை பேர் இறந்தார்கள் என்று கணக்கெடுக்க வில்லை என்பதுதான் இங்கு அதிர்ச்சியான தகவல்.

துப்பாக்கிச்சூடோ, பயங்கர வெடி குண்டுகளோ உபயோகிக்கவில்லை.



வாள்கள், இரும்புக் கம்பிகள், திரி சூலங்கள், கூர்மையான கத்திகள் இவற்றைத்தான் பயன்படுத்தியுள்ளார்கள். காவல்துறை ஆய்வாளர் கே.கே மைசூர் வாலாவிடமும், மற்ற காவல் துறையினரிடமும் உயிர் காக்கும்படி, உதவும்படி கெஞ்சியுள்ளார்கள். 'இன்று உங்களைக் காப்பாற்ற எங்களுக்கு உத்தரவு இல்லை' என்று அவர்கள் பதிலளித்துள்ளார்கள். சில எஸ்.ஆர்.பி. காவலர்கள் பாதிக்கப்பட்டவர்களை நோக்கி 'உங்களுக்கு அடைக்கலம் தர மாட்டோம். இன்று நீங்கள் சாக வேண்டிதுதான்' என்று எகத்தாளமாகச் சொல்லியுள்ளார்கள்.

'அந்த நகரில் இதர மதக் குடும்பங்கள் இல்லையா? அவங்களுக்கும் இந்த கதிதானா?'

'இது நடந்தது முஸ்லிம்களுக்கு மட்டும் தான். இந்துக்கள் குடும்பங்கள் தாக்குதல் நடக்கும்னு தெரிஞ்சி முதல் நாள் இரவே வெளியேறிவிட்டார்கள். கலவரக்காரர்களை வழி நடத்தியதே மேலவை உறுப்பினர்களான அரசியல்வாதிகள் தான்'

வெளியில் சென்றிருந்த ஆண்கள் வந்து சாப்பிட உட்காந்தார்கள். சாதிக்கா கண்களைத் துடைத்துக்கொண்டு 'சுப்ரா' விரித்தாள்.

சாலிஹா ஐந்தாறு தட்டுகளில் தக்கடிக் குழம்போடு எடுத்துக் கொடுக்க ஹஸினா கொண்டுபோய் வைத்தாள். தண்ணீர், எச்சில் பிளேட் வைத்தார்கள். பெரிய பேசின் பாத்திரத்தில் சாப்பிட எடுத்துக் கொண்டு வந்தமர்ந்தாள்.

ஆமினாக்கா நறுக்கிய பப்பாளிப் பழத் துண்டுகளை கண்ணாடிக் கோப்பையில் கொண்டு வைத்தாள். சாப்பிட ஆரம்பித்தார்கள். அங்கே கனத்த மௌனம் நிலவியது.

(தொடரும்)

HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com



அப்லா அல் கஹ்லாவி

# ஓர் இலட்சியப் பெண்ணின்

# வாழ்வும் மரணமும்

**- அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது**

அப்(B)லா அல் கஹ்லாவி எகிப்து நாட்டில் வாழ்ந்து சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த ஓர் இஸ்லாமியப் பெண் அறிஞரும் பிரபல அழைப்பாளரும் சமூக சேவையாளருமாவார். அவர் மரணிக்கும் போது அவருக்கு வயது 72.

கலாநிதி அப்லா அல் கஹ்லாவியின் தந்தை எகிப்தில் ஒரு பிரபல கலைஞராக, பாடகராக விளங்கியவர். பின்னர் கலைத்துறையைத் துறந்து இஸ்லாமியப் பாடல்கள், நஷீதுகள், கஸீதாக்கள் முதலானவற்றை மாத்திரம் இசைத்து வந்தார். பிற்காலத்தில் இவர் 'மத்தாஹுந் நபி' நபி புகழ் பாடகர் என்று அழைக்கப்படலானார். தனது மகள் அப்லா சன்மார்க்கத் துறையில் கற்றுத் தேற வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. தனது தந்தையின் விருப்பப்படி அப்லாவும் ஷரீஆ துறையைத் தனது சிறப்புத் துறையாகத் தேர்வு செய்தார்.

1974ஆம் ஆண்டு பிக்ஹ் - இஸ்லாமிய சட்டத்துறையில் தனது முதுமாணிப் (M.A) படிப்பையும் 1978ஆம் ஆண்டு அதே துறையில் தனது பட்டப் பின் கலாநிதிப் படிப்பையும் (Ph.D.) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தார் அப்லா.

ரியாத் பல்கலைக்கழகம், அல் அஸ்ஹர் பல்கலைக்கழகம், மக்கா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பிக்ஹ் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர் மக்கா பல்கலைக் கழக ஷரீஆ துறைத் தலைவியாகவும் குறிப்பிட்ட காலம் பதவி வகித்தார். 1987 முதல் 1989 வரை இரண்டாண்டுகள் மக்காவில், ஹரம் ஷரீஃபில் பெண்களுக்கான சன்மார்க்க வகுப்புக்களை நடத்தும் பெரும் பேற்றையும் பெற்றார் கலாநிதி அப்லா.

பின்னர் தனது தாய் நாட்டுக்குத் திரும்பிய இவர், கெய்ரோவில் அமைந்துள்ள தனது தந்தையின் பெயர் தாங்கிய மஸ்ஜிதில் தொடர் சன்மார்க்க விரிவுரைகளை நிகழ்த்தி வந்தார். இவரது விரிவுரைகள் பெரும்பாலும் ஆன்மிகம் சார்ந்ததாகவும், இஸ்லாமிய சட்ட விளக்கங்கள் தொடர்பானவையாகவும் அமைந்தன. எகிப்துடைய,

பல அரபு நாடுகளுடைய தொலைக்காட்சி சேவைகளிலும், வானொலி சேவைகளிலும் இவரது மார்க்க நிகழ்ச்சிகள் ஒளி, ஒலி பரப்பாகின.

பொதுமக்களைச் சன்மார்க்க வழியில் நெறிப்படுத்துவது இவரது நிகழ்ச்சிகளின் முக்கிய இலக்காக அமைந்தது எனலாம். ஜாஹிலிய்ய வாழ்க்கை வாழ்ந்த பல பெண்கள் இவரால் பாவமன்னிப்புக் கோரி மீண்டார்கள். அரபுலக சினிமா நடிகைகள் பலர் இவரது உரைகளாலும் வழிகாட்டல்களாலும் கவரப்பட்டு தூய இஸ்லாமிய வாழ்வு நோக்கித் திரும்பினார்கள்.

பிற்காலத்தில் இவர் தனது முகநூல் பக்கத்திற்கூடாக 'அல் பாகியாதுஸ் ஸாலிஹாத்' என்ற பெயரில் ஒரு தொடர் நிகழ்ச்சியை நிகழ்த்தி வந்தார். கலாநிதி அப்லா ஓர் அறிஞராக, அழைப்பாளராக மட்டுமன்றி ஒரு சமூக சேவையாளராகவும் விளங்கினார். 'அல் பாகியாதுஸ் ஸாலிஹாத்' என்ற பெயரில் ஒரு சமூக சேவை நிறுவனத்தை நிறுவி அதன் மூலமாகப் பல்வேறு சமூகப் பணிகளை முடுக்கி விட்டார்; அநாதை இல்லங்களை நிறுவினார்; முதியோர் இல்லம், புற்று நோயாளர் பராமரிப்பு நிலையம் உட்பட பல சமூக நல வேலைத்திட்டங்களையும் வெற்றிகரமாக முன்னெடுத்தார். 'அல் பாகியாதுஸ் ஸாலிஹாத்' என்ற பெயரில் ஒரு மஸ்ஜிதையும் நிறுவினார்.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு ஆக்சிஜன் கருவிகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு திட்டத்தையும் முன்னெடுத்தார். இதுவே அவர் இறுதியாக முன்னெடுத்த பணியாகும். கலாநிதி அப்லா அல் கஹ்லாவியின் இறப்பையொட்டி ஷெய்குல் அஸ்ஹர், எகிப்தின் தலைமை முப்தி உட்பட நாட்டின் முக்கியப் பிரமுகர்கள் பலர் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தனர்.

'அப்லா அல் கஹ்லாவி ஒரு ஸாலிஹான பெண்ணுக்குச் சிறந்த உதாரணமாக விளங்கியவர்; அழைப்புப்பணியைத் தனது பணியாகக் கண்டவர்; உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர்; தனது அறிவால் ஒளி பாய்ச்சியவர்; ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் உதவிக்கை நீட்டியவர்' என்று ஷெய்குல் அஸ்ஹர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**'அப்லா அல் கஹ்லாவியிடம் இல்ம், அமல் ஆகிய இரண்டும் இணைந்திருந்தன. ஷரீஆ அறிவைப் பெற்று அதைப் போதித்து வந்த அவர், பொதுப்பணியிலும் ஈடுபட்டார். எகிப்தில் சமூக சேவைகளுக்கான மிகப் பெரிய அமைப்புக்களில் ஒன்றாக அவர் உருவாக்கிய நிறுவனம் விளங்குகின்றது'**

'அப்லா அல் கஹ்லாவியிடம் இல்ம், அமல் (அறிவு, செயல்) ஆகிய இரண்டும் இணைந்திருந்தன. ஷரீஆ அறிவைப் பெற்று அதைப் போதித்து வந்த அவர், பொதுப் பணியிலும் ஈடுபட்டார். எகிப்தில் சமூக சேவைகளுக்கான மிகப்பெரிய அமைப்புக்களில் ஒன்றாக அவர் உருவாக்கிய நிறுவனம் விளங்குகின்றது' எனக் குறிப்பிட்டுள்ளார் எகிப்தின் தலைமை முப்தி அவர்கள்.

இந்த இலட்சியப் பெண்ணுடைய இறுதி வஸிய்யத்தில் அவர் குறிப்பிட்ட முக்கியமான ஓர் அம்சம் இருக்கின்றது. 'நாங்கள் உருவாக்கிய 'அல் பாகியாதுஸ் ஸாலிஹாத்' நற்பணி நிறுவனம் தனது பணிகளை இடைநிறுத்தாமல் தொடர வேண்டும். அதன் மூலம் எமக்கு நன்மைகள் தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும்' என்பதே அந்த வஸிய்யத்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த இலட்சியத் தாயின் நற்பணிகள் அனைத்தையும் ஏற்று அங்கீரிப்பானாக; அன்னாருக்கு உயர்ந்த சுவன பதவியை வழங்கியருள்வானாக! இத்தகைய நல்லடியார்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வை அமைத்துக் கொள்ளும் பேற்றை நம் அனைவருக்கும் பொதுவாகவும், நமது பெண்மணிகளுக்குக் குறிப்பாகவும் கொடுத்தருள்வானாக!

● K.ஜலாலுத்தீன்

# உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்)

இஸ்லாமிய வரலாற்றில் நேர்வழி நின்ற கலீஃபாக்களில் (குலஃபா ராஷிதீன்) ஒருவரும் ‘இரண்டாம் உமர்’ என்று புகழப் படுபவருமான உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்) குறித்த விரிவான வாழ்க்கை வரலாற்றை இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் (IFT) வெளியிட்டுள்ளது. டாக்டர் அலீ முஹம்மது அஸ்ஸல்லாபி அரபு மொழியில் எழுதிய இந்த நூலை அழகிய, எளிய தமிழில் பன்னூலாசிரியர் மௌலவி நூஹ் மஹ்ழரி தமிழாக்கம் செய்துள்ளார்.

தமிழில் இவ்வளவு விரிவாக உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் வரலாறு வெளிவந்ததில்லை. அவ்வகையில் இது ஒரு முன்னோடி நூல் எனலாம். இஸ்லாமிய வரலாற்றில் ஓர் ஒளிரும் தாரகையாக விளங்கியவர் உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்). இறைத்தூதர் முஹம்மத் நபி(ஸல்) கூறினார்கள், ‘ஒவ்வொரு நூறு ஆண்டு களின் முடிவிலும் இந்தச் சமுதாயத்திற்காக அதன் மார்க்கத்தைப் புதுப்பிப்பவரை (முஜத்தித்) அல்லாஹ் எழுப்புவான்’ (சுனன் அபூதாவூத் 4291). இந்த நபிமொழியின் ஒளியில் இந்த முஸ்லிம் உம்மத்தின் முதல் ‘முஜத்தித்’ ஆக இவர் போற்றப்படுகிறார்.




உமர் இப்னு அப்துல் அஸீஸ் மக்காவில் கி.பி.680இல் பிறந்தார். கி.பி. 720இல் மரணமடைந்தார். அவர் உமைய்யா வம்ச குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தாத்தா மர்வான் பின் ஹக்கம் கலீஃபாவாக இருந்தார். அவரது தந்தை அப்துல் அஸீஸ் பின் மர்வான் எகிப்தின் ஆளுநராக இருந்தார்.

இளமையிலேயே குர்ஆனை மனனம் செய்துள்ளார். நபிமொழிகளை (ஹதீஸ்) ஆய்வு செய்தார். புகழ்பெற்ற அறிஞர்களிடம் கல்வி பயின்றார். தன் இளம் வயதிலேயே, வலீத் பின் அப்துல் மலிக் பின் மர்வான் கலீஃபாவாக இருந்த காலத்தில் உமர் இப்னு அப்துல் அஸீஸின் நேர்மை, நிர்வாகத் திறன் காரணமாக, அவரை மதீனாவின் ஆளுநராக நியமித்தார். அந்தப் பதவியில் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார்.

கலீஃபா வலீத் மரணத்திற்குப் பின் அவரது சகோதரர் சுலைமான் பின் அப்துல் மலிக் கலீஃபாவாக நியமிக்கப்பட்டார். அவருடைய அரசியல் அலோசகராக உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்) திகழ்ந்தார். சுலைமான் தான் இறக்கும் வேளையில் உமர் பின் அப்துல் அஸீஸை கலீஃபாவாக நியமித்தார். உமர் இப்னு அப்துல் அஸீஸ் இரண்டரை ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செய்தார். அவருடைய ஆட்சிக் காலம் குறுகியதாக இருந்தாலும், அது இஸ்லாமிய நீதி, நிர்வாகத்தின் பொற்காலமாகக் கருதப்படுகிறது.

**நூல்:** உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்)

**ஆசிரியர்:** டாக்டர் அலீ முஹம்மத் அஸ்ஸல்லாபி

**தமிழாக்கம்:** மௌலவி நூஹ் மஹ்ழரி

**வெளியீடு:** இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்(IFT), 138, IFT சந்து, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 600012.
தொலைப்பேசி: 044-26620041

**பக்கங்கள்:** 608 **விலை:** ரூ. 750/-

உமர் இப்னு அப்துல் அஸீஸ் கலீஃபா வாகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் தன்னுடைய குடும்பத்தின் சொத்துகளையெல்லாம் அரசுக் கருவூலத்தில் சேர்த்தார். எளிமையாக வாழ்ந்தார். அவரது ஆட்சியில் எல்லோருக்கும் சமநீதி வழங்குவதை அடிப்படை யாகக் கொண்டார். தனது குடும்பத்தினருக்குக் கூட விதிமுறைகளைக் கடுமையாகப் பயன் படுத்தினார். கலீஃபாவும் சட்டத்திற்கு உட்பட்டவர் என்று அறிவித்தார்.

நீதிமன்றங்களில் தனிப்பட்ட வழக்கு களை நேரடியாகக் கேட்டார். அரசுக் கருவூலத்தை (பைத்துல்மால்) முறையாக நிர்வகித்தார். வரி வசூலிப்பவர்களுக்குக் கடுமையான விதிமுறைகளை விதித்தார். இராணுவ வீரர்களுக்கு அதிக ஊதியம் கொடுத் தார்; ஆனால் அதை அவர்கள் தவறாகப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொண்டார்.

நீண்டகால முற்றுகைகளிலிருந்து இராணு வத்தை விலக்கினார். போர்களுக்குச் சிறிது ஓய்வு கொடுத்தார். அதே சமயம் மிகவும் தேவையான நேரங்களில் படைகளை அனுப்பினார். படைத்தளபதிகளுக்கு ‘நீங்கள் மக்களை அடக்கி வரி வசூலிக்கக்கூடாது’ என்று ஆணையிட்டார். போர்க்களத்தில் இஸ்லாமியச் சட்டங்களைப் பின்பற்ற வேண் டும் என்று உத்தரவிட்டார்.

கல்வி நிலையங்களை நாட்டின் பல பகுதிகளிலும் உருவாக்கினார். தகுதிமிக்க ஆசிரியர்களை நியமித்தார். இறைவேதம் குர்ஆனையும், இறைத்தூதர் போதனை களையும் ஆண், பெண் இருபாலரும் நன்கு புரிந்துகொள்வதற்காக நகரங்கள் தோறும் இஸ்லாமிய அறிஞர்களை நியமித்தார். உமர் இப்னு அப்துல் அஸீஸ் எளிமையான உடை களை அணிந்தார். பகல் முழுவதும் ஓயாமல் ஆட்சி, நிர்வாகப் பணிகளில் உழைத்தர், இரவு நேரங்களில் இறைவழிபாட்டில் ஈடுபட்டார். இவருடைய ஆட்சிக்காலத்தில் நபிமொழி களைத் திரட்டி நூல் வடிவில் கொண்டு வருவதற்கான பணிகளைத் தொடங்கினார்.

தன்னுடைய முப்பது மாத கால நல்லாட்சி யில் நாட்டில் ஏழ்மையை முற்றிலுமாக ஒழித் தார். வசதி படைத்தவர்கள் ஜகாத் நிதியைக் கையில் வைத்துக்கொண்டு அலைந்த போது அதனைப் பெற்றுக்கொள்வதற்கு ஏழைகள் இல்லாத உன்னத சமுதாயத்தை உருவாக்கினார். அவருடைய குறுகிய கால ஆட்சியில் பண்பாடுகளும் ஒழுக்கங்களும் உயர்ந்தோங்கின.

பிரபலமான திருக்குர்ஆன் விரிவுரை யாளர் இமாம் தபரி(ரஹ்) குறிப்பிடுகிறார்: முந்தைய கலீஃபா வலீத் கட்டிடங்கள், தொழிற் சாலைகள், தோட்டங்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அவர் காலத்தில் மக்கள் சந்திக்கும்போது தொழிற்சாலைகள், கட்டுமானம் குறித்து ஒருவருக்கொருவர் பேசுவார்கள். பின்னர் சுலைமான் கலீஃபா வானார். அவரோ திருமணம், உணவு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத் தார். அவர் காலத்தில் மக்கள் சந்திக்கும் போது திருமணம், இளம்பெண்கள் குறித்து ஒருவருக்கொருவர் பேசுவார்கள். உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்) அவர்களு டைய ஆட்சியில் மக்கள் சந்திக்கும் போது, ‘நேற்றிரவு எத்தனை ரக்அத்கள் தொழு தீர்கள்?, எத்தனை வசனங்கள் குர்ஆன் மனனம் செய்தீர்கள்?, இறுதியாக எப்போது குர்ஆன் ஓதி முடித்தீர்கள்?, இனி எப்போது முடிப்பீர்கள்?, இந்த மாதம் எத்தனை நோன்பு வைத்தீர்கள்?’ என்று ஒருவருக்கொருவர் கேட்பார்கள். (தாரீகுத் தபரி)

உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்) தன்னுடைய 40ஆவது வயதில் (ஹிஜ்ரி 101 - கி.பி.720இல்) மரணமடைந்தார். உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் மாபெ ரும் தலைவர். இஸ்லாமிய உலகில் சமூகம், அரசியல், பொருளாதாரம், மார்க்க விஷயங் களில் ஒரு புதிய புரட்சியைக் கொணர்ந்தவர். அஸ் ஸல்லாபி அவர்கள் எழுதியபடி, உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்) ஓர் நல்லாட்சி நாயகர், மார்க்க அறிஞர், முஜத்தித், புரட்சி கரமான சீர்திருத்தவாதியும் ஆவார்.

இன்றைய சமூகத்தை ஒப்பிட்டு நோக்கினால், தாராளமயமும், சமத்துவமும், நீதியும், நியாயமும், அன்பும் அவரின் ஆட்சிக் காலத்தில்தான் முழுமையாக வெளிப்பட்டன என்று கூறலாம். இஸ்லாமிய வரலாற்றை ஆழமாக அறிய விரும்புவோர், தலைமைப் பண்புகளைப் புரிந்து கொள்ள விரும்புவோர், இஸ்லாத்தின் அரசியல் மாண்புகளை அறிய விரும்புவோர், சரித்திர மனிதரை வழிகாட்டியாகக் கருத விரும்பு வோர் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய அற்புதமான நூல்.

# சமரசம் புதிர் போட்டி 3

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை **2026 பிப்ரவரி 17**ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, **73050 40386** என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, **samarasam.article@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி – G Pay எண் ஆகியவற்றை அனுப்பவும்.

1. ‘இறைநம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன் இருந்த (நபிமார்களைப் பின்பற்றிய) வர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல், உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப் பட்டிருக்கிறது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுள்ளவர்களாய்த் திகழக்கூடும்’ இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அந்நூர் ஆ) அல் பகரா

2. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘ஒரு காலம் வரும். அப்போது தீனார், திர்ஹம் தவிர வேறு எதுவும் பயன் அளிக்காது’ இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) மிக்தாம் பின் மஅதிகரீப்(ரலி)
   ஆ) அபூஹுரைரா(ரலி)

3. உமர்(ரலி) காலத்தில் நான்காயிரம் மாண வர்களுக்குப் பாடம் கற்பித்த ஆசிரியர்

   அ) முஆத் இப்னு ஜபல்(ரலி)
   ஆ) முஸ்அப் இப்னு உமைர்(ரலி)

4. தந்தை தன் மக்களுக்கு அளிக்கும் அன்பளிப்புகளில் மிகச் சிறந்தது

   அ) நல்ல வீடு, வாகனம்
   ஆ) நல்லொழுக்கம், நல்ல கல்வி

5. 31 இணைய செயலிகளை உருவாக்கி சாதனை படைத்த ஒன்பதாம் வகுப்பு மாணவர்

   அ) முஹம்மது அனஸ் (ஆ) உஸைர் மாலிக்

6. சாரே சஹான்சே அச்சா பாடலை எழுதியவர்

   அ) அல்லாமா இக்பால்
   ஆ) ரவீந்திரநாத் தாகூர்

7. ரோமப் பேரரசின் வீழ்ச்சியும் அழிவும் எனும் நூலை எழுதியவர்

   அ) சார்லஸ் டிக்கன்ஸ் ஆ) எட்வர்ட் கிப்பன்

8. வெனிசுலாவில் அத்துமீறி நுழைந்து ட்ரம்பால் கைது செய்யப்பட்ட வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி

   அ) நிக்கோலஸ் மதுரே
   ஆ) மார்க் கார்னி மார்ச்


**புதிர் போட்டி ஒன்றுக்கான விடைகள்:**

1. (அ) அல் அஃராஃப் 2. (அ) அப்துல்லாஹ் பின் அம்ரு(ரலி) 3. (ஆ) ஓய்வு 4. (ஆ) இஸ்தித்ராஜ் 5. (அ) தஅபீர் 6. (ஆ) என்னைக் கவர்ந்த பெருமானார்(ஸல்) 7. (அ) தமிழ்ச் செல்வன் 8. (அ) நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் 9. (ஆ) டிசம்பர் 18 10) (அ) ஷஹீத் யஹ்யா சின்வார்

புதிர் போட்டிக்கு மிகப் பெரும் வரவேற்பைத் தந்த வாசகர்களுக்கு நன்றி. அதிக மானோர் போட்டியில் கலந்து கொண்டு விடை அளித்திருந்தாலும் தஞ்சை நெடுஞ் தெருவைச் சேர்ந்த சம்சுன் நஹார், துளசேந்திரபுரம் ப.சையத் முஹம்மத் ஆகிய இருவர் மட்டுமே சரியான விடையை எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**சம்சுன் நஹார்,**
**நெடுந்தெரு,**
**தஞ்சாவூர் மாவட்டம்.**

# வண்ணம் தீட்டுங்கள்..!



## சித்திரம் பேசுது..!



R. ஆரிஷ் அஹமத், 6ஆம் வகுப்பு,
ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல்,
சிதம்பரம் (கிள்ளை)




யஹ்யா, இரண்டாம் வகுப்பு
Stanes ICSE school
கோயம்புத்தூர்

# கடையநல்லூரில்
# சமரசம் வாசகர் வட்டச் சந்திப்பு




2025 டிசம்பர் 28ஆம் தேதி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கடையநல்லூர் கிளை சமரசம் வாசகர் வட்டச் சந்திப்பு நிகழ்வை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தது. இந்த நிகழ்வை கடையநல்லூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிளைத் தலைவர் K.பீர் முஹம்மது தலைமையேற்று நடத்தினார். பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் பரமசிவன், மஹபூப் ஆகியோர் சமரசத்தின் சிறப்புகளை மிக நெகிழ்வாக எடுத்துரைத்தனர்.

வி.எஸ். முஹம்மது முஸம்மில் புகாரி வழிநடத்த ஜபருல்லாஹ் நன்றி கூறினார். வாசிப்பின் சிறப்புகளையும், அவசியத்தையும், இஸ்லாமிய இதழின் தேவையையும், சமரசத்தின் சிறப்பு களையும் சகோதரி V.I.ஆபிதா பர்வீன் ஆலிமா எடுத்துரைத்தார்.

‘எனக்கு சமரசத்தில் மிகவும் பிடித்த பகுதி தலையங்கம்தான். நாட்டு நடப்புகளை மிகத் துல்லியமாகச் சொல்வதுடன் பிரச்னைகளுக்கான தீர்வையும் தலையங்கம் வழங்கும். சமரசத்தின் மிக முக்கியமான பகுதிகளாக திருக்குர்ஆன் விரிவுரை, சிறார் உலகம், கடைசிப் பக்கம் ஆகியவற்றைச் சொல்லலாம்’ என்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கடையநல்லூர் மகளிர் வட்டப் பொறுப்பாளர் ஆயிஷா ரில்வான் தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.

சமரசம் இதழின் பொறுப்பாசிரியர் வி.எஸ். முஹம்மத் அமீன் சிறப்புரையாற்றினார். ‘கடைய நல்லூர் எழுத்தின் மண். தொடக்க காலம் முதல் இன்று வரை சமரசத்தின் வளர்ச்சியில் கடைய நல்லூருக்கு மிக முக்கியமான பங்கு இருக்கிறது. சேயன் இப்ராஹீம் அவர்களின் எழுத்துப் பங்களிப்பை யாவரும் அறிவர். முடவன் குட்டி, கவிஞர் காதர், கவிஞர் ஷம்ஸ், மர்ஹூம் கயஸ், மர்ஹூம் இந்தி புகாரி, வி.எஸ்.முஸம்மில் புகாரி, ஷம்ஸ் இப்ராஹீம், பீர் முஹம்மது, ரில்வான், கவிஞர் காசிம் போன்ற கடையநல்லூர் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் சமரசத்தை அலங்கரித்திருக் கின்றன. மர்ஹூம் சேயன் ஹமீது மாமா அவர்கள் சமரசத்தை கடையநல்லூரில் கொண்டு சேர்த்ததில் பெரும் பங்காற்றியவர். அனைவரையும் நன்றியோடு நினைவு கூர்கின்றேன்.

வகுப்புவாதத்தின் வெறுப்பு மேகங்கள் சூழ்கின்ற இன்றைய காலத்தில் முஸ்லிம்களின் இருப்பும், அடையாளமும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நெருக்கடியான காலத்தில், முஸ்லிம்களின் வரலாறு முற்றிலும் அழிக்கப்பட்டும், மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் தங்களின் நியாயங்களையும், பங்களிப்பையும் சொல்வதற்கான வாய்ப்புகள் குறைந்து போன சூழலில்தான் சமரசம் போன்ற இதழ்கள் தங்களின் சின்னஞ்சிறிய குரலால் மக்களின் மனசாட்சியைத் தட்டி எழுப்பிக் கொண்டிருக்கின்றது.

ஊடகங்கள் விலை போகும் காலத்தில் முஸ்லிம்களுக்கான குரலாக மட்டுமின்றி நீதிக்காகவும், அறத்திற்காகவும், ஜனநாயக விழுமங்களுக்காகவும், சத்தியத்திற்கான குரலாகவும் தான் சமரசத்தின் குரல் எழுந்து கொண்டிருக்கின்றது. இந்தக் குரலை வலுப்படுத்த வேண்டிய பொறுப்பு எல்லாருக்கும் இருக்கிறது. சமரசம் ஓர் அறிவுச் சொத்து. அனைவரும் தோள் கொடுங்கள், துணை நில்லுங்கள்’

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 February 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.


# Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo




**Send your documents & Parcels through**

## THE PROFESSIONAL COURIERS

Pro premium *a professional service* › DOMESTIC › INTERNATIONAL › CARGO

**BUSINESS ENQUIRY :**
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

**SERVICE ENQUIRY :**
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com




If undelivered, please return to : Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.